www.pustaka.co.in

# முத்துப் பந்தல்



இந்திரா
செளந்தர்ராஜன்

http://www.pustaka.co.in

# முத்துப் பந்தல்!

# Muthu Pandhal!

## Author:

## இந்திரா செளந்தர்ராஜன்

Indira Soundarajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

# முத்துப் பந்தல்!

# 1

“அது என்னவோ தெரியவில்லை - கடற்கரைக்கு சென்றாலே உடம்பும் மனமும் லேசாகி விடுகிறது. அது எதனால் தெரியுமா?” என்று கேட்ட பேராசிரியர் ராஜேந்திரனை கடல் ஆய்வு செய்ய வந்த அவரது மாணவர்களும் ஆவலாக பார்த்தனர்.

'பூமியைப் பற்றி எண்ணும்போது எல்லோருக்கும் நிலப்பரப்பும் அதில் வாழும் மனித இனமும்தான் நினைவுக்கு வரும். ஆனால் உண்மை அதுவல்ல...! பூமி என்றால் நினைவுக்கு வரவேண்டியது கடல்தான். பூமியில் மூன்று பங்கு கடல் நீரால்தான் சூழப் பட்டுள்ளது. அடுத்து நினைவுக்கு வரவேண்டியது கடல் வாழ் உயிரினங்களான மீன்கள்தான்... மக்கள் தொகை கூட **600** கோடிதான். ஆனால் கடலுக்குள் வாழும் உயிரினங்களின் எண்ணிக்கையோ பல ஆயிரம் கோடி!

உண்மையில் பூமி என்றால் கடலும் மீனும்தானே நினைவுக்கு வரவேண்டும்?

“மிக அதிக அளவு தண்ணீர்

மிக அதிக அளவு காற்று

மிகப் பெரிய அளவில் ஆகாயம்

மிகப் பெரிய அளவில் நிலப் பகுதி

இவைகளுக்கு நடுவே மிகப்பெரிய நெருப்புத் துண்டமான சூரியன்? என்று பஞ்சபூதங்களையும் பெரிய அளவில் பார்க்க முடிவது

கடற்கரையில்தான். மிகக் குறைந்த அளவிலான பஞ்சபூத கலவை கொண்ட நாம் அதிக அளவை உணரும்போது உடம்பில் ஒரு ஆனந்தப் பரவசம் ஏற்படுவது சகஜம்தானே?" என்று அவர் திருப்பிக் கேட்டார்.

அவர்களுக்கும் அந்த பதில் கொஞ்சம் புதியதாகவும் சரியான ஒன்றாகவும் தோன்றியது.

அவர்கள் மொத்தம் பத்து பேர். பேராசிரியர் ராஜேந்திரன்தான் அவர்களுடைய கடல் ஆய்வுக்கு தலைவர்.

அவர்களுக்கு எதிரில் வங்காள விரிகுடாக் கடல் நீலப்பாய் போல விரிந்து கிடந்தது. கரை ஓரத்தில் மட்டும் அலைகளின் பாய்ச்சல், காற்றும் சீரான வேகத்தில் வீசிக் கொண்டிருந்தது. கரை வெளியும் மெதுமெது வென்று, குறுமணலால் படிந்து கிடந்தது. தலைக்கு மேலே வானில் சூரியனும் மேற்கு நோக்கிய தனது பயணத்தில் இருந்தான்.

நிறைய பறவைகள்! வெண்ணிறமாய் பறந்த பறவைகளைப் பார்க்கும்போது மட்டும் அவை எல்லாம் கொக்குகள் என்பது தெரிந்தன. வல்லூறுகளையும் உணர முடிந்தது. ஆனால் அவைகளையும் கடந்து பலவித பறவைகள் நீலக்கடல் மேல் பறந்தபடி இருந்தன. சில தாழப் பறந்து நீர்வெளிமேல் மேம்போக்காக நீந்த வந்த மீன்களை ஒரே தாக்குதலில் கொத்திப் பிடித்தபடி மேலேறிப் பறந்தன.

கடலாடிகளும் கடல்வெளிமேல் எஞ்சின் படகுகளில் டுர் டுர் என்று பறந்து கொண்டிருந்தனர். கட்டு மரங்கள் அவ்வளவாகக் கண்ணில் படவில்லை. மௌனமாக ராஜேந்திரனும் அவரது மாணவர்களும் பார்த்துக் கொண்டே நெடுநேரம் கரைவெளிமேல் நின்று விட்டனர். அவர்களுக்குப் பின்னால் பார்க்க முடிந்த தூரத்தில் இருந்தது பாண்டிக் குப்பம் என்கிற சேரிப் பகுதி. சேரி முழுக்க பனை ஓலைகளால் வேயப்பட்ட குடிசைகள் - குடிசைகளின் கூரைமேல் விரும்பம்போல கட்சிக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

பேராசிரியர் ராஜேந்திரன் கடலின் அழகை ரசித்தது போதும் என்று எண்ணியவர் போல தனது மாணவர்களைப் பார்த்தார். பின் மணல் வெளியில் ஒரு இடத்தில் போய் சப்பணமிட்டு அமர்ந்தார். அவர்களும் அவர் எதிரில் வட்டமாய் அவரைப் பார்க்கும் விதமாய் உட்கார்ந்து கொண்டனர்.

பேச்சு ஆரம்பமாயிற்று.

"சார். இந்த கடல் பகுதிக்கு நாம வந்து மூணு நாளாச்சு. தினம் வரோம். நிக்கறோம். பார்க்கறோம். எப்ப கடலுக்குள்ள பிரவேசிக்கப் போறோம்?" ஒருவன் கேட்டான்.

"நிச்சயமா தெரியுமா சார்... இந்த பகுதியில்தான் பல்லவர்களோட சிற்பக்கூடம் இருந்து மூழ்கிச்சா?"

"சிற்பக் கூடம் மட்டுமா? ஒரு ஊரே மூழ்கிப் போச்சு. இங்க இருந்து ஏழு மைல் தொலைவுல இருக்கற மகாபலிபுரமும், கரையோரமா உள்ள அந்த கோவிலும் அந்த நாள்ல ஊருக்கு வெளிய ஒதுக்குப் புறத்துல இருந்தது. ஊரே மூழ்கிப் போகவும் ஊருக்கு வெளிய இருந்த கோவில் இப்ப கரையோரமா உள்ள கோவிலா மாறிடிச்சு."

"அகழ்வாராய்ச்சி செய்யற நம்ம மத்திய அரசோட துறை கடலுக்குள்ள இறங்கிப் பார்க்கலையா?"

"ஏன் பார்க்காம...? பார்த்ததனாலேதானே ஒரு ஊரே கடலுக்குள்ள மூழ்கிக் கிடப்பது தெரிய வந்தது. ஆனா பல காரணங்களால ஆராய்ச்சியை தீவிரமா தொடரலை..."

அரசாங்கத்துக்கே அக்கறை இல்லாத ஒரு விஷயத்துல நாம மட்டும் ஈடுபடணுமா சார்...?"

"அப்படி இல்ல... மூழ்கிப் போன ஊருக்கு பேர் முத்துக்கோட்டை. இது ஒரு காரணப் பேர். இந்த கடல் வெளியில பல்லவர்கள் காலத்து கடல் வாணிபம் ரொம்ப சிறப்பா நடந்திருக்கணும். அதுல முத்துக்கள்தான் சென்டர் அட்ராக்ஷன்.

அந்தக் காலத்துல தங்கம் வைரத்துக்கு பிறகு பெரிய வாணிபப் பொருளா இருந்தது முத்துதான். அப்படிப்பட்ட முத்துக்களோட வியாபார பகுதியா அந்த ஊர் இருந்ததாலதான் முத்துக்கோட்டைங்கற பேர் வந்ததா நான் தெரிஞ்சுக்கிட்டேன்."

"சரி சார்... அந்த முத்துக் கோட்டையை நாம இப்ப இந்த கடலுக்குள்ள இறங்கி கண்டுபிடிக்கப் போறோமா சார்..."

"ஆமாம்… கூடவே பல அதிசயமான உண்மை களையும்..."

"அது என்ன சார்?"

“இந்தியாவோட கடல் எல்லைப் பகுதியோட நீளம் ஆறாயிரம் கிலோ மீட்டர். மகாராஷ்ட்ராவுக்கு மேல குஜராத்துல தொடங்கி இந்த பக்கமா ஒரிஸ்ஸா வரை நடுவுல கன்னியாகுமரிதான் கீழ் எல்லை. இவ்வளவு நீண்ட கடற்பகுதியில முத்துக் கோட்டைலதான் பெரிய அளவுல முத்து வியாபாரம் நடந்துருக்கு. எப்பவும் ஒரு பொருள் எங்க அதிகம் கிடைக்குமோ அங்கதான் அதுக்கான மார்க்கெட்டும் இருக்கும். அப்படிப் பார்த்தா முத்துக்கோட்டை மூழ்கின. இந்த கடற்பிராத்தியத்துல அந்த காலத்துல முத்து கிடைச்சிருக்கணும். முத்து கிடைக்கணும்னாலே அந்த கடற்பகுதி அதிக ஆழம் இல்லாததாகவும், பெரிய அளவுல சுறாமீன்களோ - இல்லை - கடற் பசுக்களோ வராத இடமாவும் இருக்கணும். முத்து விளைய கடல் மேல அதிகபட்ச மழை பெய்யணும். அந்த நன்னீர் மழை கடல்நீரோட சேர்ந்து ஏற்பட்ற சிறிய அளவு மாற்றத்துலதான் பல புதிய கடல்வாழ் உயிரினங்கள் உருவாகின்றன. அவை எல்லாம் கடலோட மிகப் பெரிய செல்வம். அப்புறமா கடற் செல்வம்னு சொல்லப்படுற சங்கும் அதிகமாக முத்து விளையற இடத்துலதான் கிடைக்கும்...”

பேராசிரியர் ராஜேந்திரன் தான் அறிந்த செய்திகளை சொல்லிக் கொண்டே போனார். மாணவர்களும் ‘அடேயப்பா...' என்கிற மாதிரி பார்த்தனர்.

“சார்... நீங்க சொல்ற மாதிரி முத்துக்கோட்டை இந்த கடல் பிராந்தியத்துல இருந்து - அதை நாம கண்டுபிடிச்சிடுறோம்னே வையுங்க... அதனால என்ன சார் இந்த நாட்டுக்கு நன்மை...?”

- ஒரு மாணவர் கேட்கவும் ராஜேந்திரன் மௌனமாக அவரை வெறித்தார். மனதுக்குள் அவருக்குள் அந்த கடல் வெளிக்கு எதிர்திசையில் உள்ள மலை கரடு ஒன்றில் இருக்கும் குகைக்குள் பாலிமொழியில் வாசித்த கல்வெட்டு தான் அவர் நினைவுக்கு வந்தது.

அதன் பொருள்: 'முத்துக்கோட்டை அழிந்திடவும், கடற்கோள் ஏற்படவும் ‘வருணதாரா’ என்கிற ஒரு தேவதையும் அந்த தேவதைக்கான வழிபாடும்தான் காரணங்களாகும்... வருணதாராவை யார் எங்கு முறைப்படி வணங்கினாலும் வணங்கப்பட்டதில் இருந்து அதிகபட்சமாக ஒரு மண்டல காலத்தில் அடாத மழை பெய்து ஊரே அழியும் அளவு போய்விடும்’ என்பதுதான் அதன் செய்தி. அப்படிப்பட்ட வருணதாரா முத்துக் கோட்டை நகரின் மையத்தில் எல்லோரும் பார்க்கும் விதத்தில் வைக்கப்பட்டிருந்ததாம். அந்த வருணாதாரா தேவதை சிலை எப்படி

இருக்கும்?

இதுதான் பேராசிரியர் ராஜேந்திரனின் கேள்வி... அது மட்டுமல்ல. அந்த வருணதாராவால் தான் பிரளயமே வந்து ஊரே அழிந்ததாகவும் அந்த மலைக் கல்வெட்டு செய்தி கூறியது. அதை எவ்வளவுக் கெவ்வளவு வெளிப்படும்படி வைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு மழை என்பதும் ஒளிந்துள்ள ஒரு தகவல் ஆகும்.

இந்த கல்வெட்டு செய்தியை முதலில் ராஜேந்திரன் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் தஞ்சாவூர் போன சமயம் அங்கே சரஸ்வதி மகாலில் பாதுகாக்கப்படும் ஏட்டுக் கட்டுகளில் ஒன்றினை தற்செயலாக வாசிக்கும் ஒரு வாய்ப்பு ராஜேந்திரனுக்குக் கிடைத்தது.

ஏடுகளைப் பராமரிப்பது எப்படி என்றும், அவைகளை எப்படி வாசிக்க வேண்டும் என்றும் ஒரு பயிற்சி வகுப்பு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டபோது கலந்து கொண்டவர்கள் அவ்வளவு பேர் கைகளுக்கும் ஒரு ஏட்டுக்கட்டு வழங்கப்பட்டது. அதை வைத்துக் கொண்டு எப்படி அதை அடுக்குவது, பிரிப்பது, நூல் கொண்டு கட்டுவது, பின் கண் முன்னே பிடித்துக் கொண்டு வாசிப்பது என்று ஒவ்வொன்றாக சொல்லித்தரப்பட்டது. அப்போதுதான் ராஜேந்திரன் தன் வசம் வைத்திருந்த ஏட்டில் வருணதாரா என்கிற பெயர் இருக்கக் கண்டார்.

வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த கிராமம் ஒன்றின் வயலில் வருணதாராவுக்கு நிகழ்ந்த பூஜையை அந்த ஏடு சொன்னது. அப்படியே வருணாதாரா சிலை வானம் பார்த்த அந்த பூமியில் வெயில் பட நின்றது. அதன் மேல் எவ்வளவு நேரம் வெய்யில் பட்டிருந்ததோ, அதைப் போல இரு மடங்கு நேரம் அந்த கிராமத்தில் மழை பொழிந்து கிராமமே வெள்ளக் காடாகி விட்டது. அதன்பின் மழையை நிறுத்த வருணதாராவைத் தூக்கி ஒரு கிணற்றில் போட்டபிறகுதான் மழை நின்றதாக அந்த ஏட்டில் காணப்பட்ட செய்தி பேராசிரியர் ராஜேந்திரனை வெகுவாக சிந்திக்க வைத்து விட்டது.

'வருணதார சிலைக்கும் மழைக்கும் அப்படி என்ன தொடர்பு...? எதனால் மழை பெய்தது? இன்று வருணதாரா சிலை நம்வசம் இருந்தால் வறண்ட ஊர்களில் மழையை வருவிக்க முடியுமா?' இதெல்லாம்தான் ராஜேந்திரனின் கேள்விகள்.

இதை ராஜேந்திரன் தன் சக ஆராய்ச்சியாளர்களிடம் கூறிய போது அவர்கள் சிரித்து விட்டனர். "வருணதாராவாவது ஒண்ணாவது...

போங்க சார். எல்லாக் காலத்துலயும், கற்பனையா புளுகற எழுத்தாளர்கள் இருந்திருக்காங்க போல இருக்கு. அப்படி யாரோ ஒருத்தர் எழுதினதை எவ்வளவோ நூற்றாண்டு கழிச்சு படிச்சுட்டு அதுமேல போய் நம்பிக்கை வைக்கிறீங்களே சார்...” என்று கேலி வேறு செய்தனர்.

ஆனால் ராஜேந்திரன் மனம் தளரவில்லை.

இதோ அவர் எதைச் சொன்னாலும் கேட்கத் தயாராக உள்ள அவரது மாணவர் படை எதிரில்.

அவரும் வருணதாரா பற்றிய சிந்தனையோடுதான் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி வருகிறார்.

“எக்ஸ்யூஸ்மீ சார்... நம்ம ஆய்வோட நோக்கம் வரணதாரா சிலையைக் கண்டுபிடிக்கிறது மட்டும்தானா இல்லை மூழ்கிப் போன முத்துக் கோட்டை பற்றியும் தகவல்கள் சேகரிக்கிறதா?”

“நிச்சயம் முத்துக்கோட்டை பற்றியும் தகவல்கள் சேகரிக்கணும். குஜராத்ல கடல்ல மூழ்கினதுவாரகையை இப்பவும் ஆய்வாளர்கள் ஆய்வு செய்துகிட்டு இருக்காங்க... அங்க அவங்களுக்கு கிடைக்கிற ஊக்கம், உற்சாகம் இங்க நமக்கு இல்லை...”

“அப்படி நாம ரிஸ்க் எடுத்து கண்டுபிடிச்சா நமக்கு என்ன பிரயோஜனம் சார்...?”

“ஆய்வு செய்யறவங்க இப்படி யோசிக்கிறதே முதல்ல தப்பு. நம்ம பணியை பணம் காசால மதிப்பிடவே முடியாது. இருந்தாலும் உங்களுக்கு நான் சொல்லிக்கறேன். மூழ்கிப்போன முத்துக் கோட்டைக் குள்ள ஏராளமான முத்துக்களும் சேர்ந்துதான் புதைஞ்சு போயிருக்கு. முத்துக்கோட்டைல முத்துப்பந்தல்ங்கற பேரால திங்கட்கிழமைகள்ல மார்க்கெட் கூடியிருக்கு. அதாவது அன்னிக்கு வெளிநாட்டுல இருந்தெல்லாம் முத்து வாங்க அந்த முத்துப் பந்தலுக்கு வணிகர்கள் வந்திருக்காங்க... அப்படி அவர்கள் வந்த சமயத்துலதான் சுனாமி மாதிரி பேரழிவு ஏற்பட்டு முத்துக்கோட்டையே கடலுக்குள்ள போனது. தப்பிச்சவங்க ரொம்ப குறைவு. அவங்க சொன்ன தகவல்களாலதான் இன்னிக்கு நான் உங்ககிட்ட அந்த விஷயங்களைப் பேச முடியுது...”

“அப்ப நம்ம ஆய்வில் நாம முத்துக்கோட்டைக்கு குறி வைச்சா

முத்துக்களும் கிடைக்க வாய்ப்பிருக்கா சார்...?”

"ஆமாம்... புதைஞ்ச முத்துக்களும் கிடைக்கலாம். புதுசா கடலுக்குள்ள விளைஞ்ச முத்துக்களும் கிடைக்கலாம்.”

"வாவ்… அதை நாம நமக்குன்னு வெச்சுக்கலாம் இல்லையா?”

“தாராளமா... பூமிக்குள்ள புதைஞ்சு கிடக்கிற புதையல்தான் அரசாங்கத்துக்கு சொந்தம். கடலுக்குள்ள கிடக்கிற செல்வங்கள் கஷ்டப்பட்டு எடுக்கிறவங்களுக்கு தான் சொந்தம்.”

“நம்ம ஆராய்ச்சிக்கு அரசாங்கத்துகிட்ட அனுமதி வாங்க வேண்டாமா சார்?”

“நான் அகழ்வாராய்ச்சிப் பிரிவு தலைவருக்கு தகவல் கொடுத்துட்டேன். நாம அவங்களோட அங்கீகரிக்கப்பட்ட குழு இல்ல... இருந்தாலும் கோயில்ல கூட்டம் அதிகரிக்கும் போதும், ட்ராஃபிக்லை யும் இந்த ஸ்கௌட்ல இருக்கிறவங்க போய் பயிற்சி எடுக்கற மாதிரி நாம ஒரு தன்னார்வக் குழு போல இதுல ஈடுபடப் போறோம். நம்ம ஆய்வுல நாம சேகரிக்கப் போற தகவல்கள்தான் அகழ்வாராய்ச்சிப் பிரிவையே யோசிக்க வைக்கப் போகுதுங்கறது என் கருத்து.” - ராஜேந்திரன் உறுதிப்படச் சொல்லிவிட்டு எழுந்து நின்றார். அவர் நிற்கும் விதமே இனி பேச ஒன்றும் இல்லை என்கிற மாதிரி இருந்தது. அவர் எதிரில் வட்டம்கட்டி அமர்ந்திருந்த மாணவர்களும் எழுந்தனர்.

“எக்ஸ்க்யூஸ் மி சார்... கடலுக்குள்ள இறங்கி அடி ஆழம் வரை போறதும், போட்டோ எடுக்கறதும் பயங்கர அட்வென்ச்சர்ஸ். எங்களுக்கு அதுல இண்டர்ஸ்ட் இல்ல. பை த பை எங்க ஹெல்த்துக்கும் அது ஒத்துக்காது. ஆகையால...”

- அந்த கூட்டத்தில் ஒருவர் சொன்ன கருத்துக்கு ஆறு பேர் ஆமோதிப்பதாக கைகளை உயர்த்தினர்.

“அப்ப உங்களால கடல்ல இறங்க முடியாது. அப்படித்தானே?”

"ஆமாம் சார்... உங்க ஆராய்ச்சித் தகவல்களை கம்ப்யூட்டர்ல இன்செர்ட் பண்ணி ஃபைல் பண்றதும், உங்களுக்கு கடலுக்கு வெளிய எல்லாவித உதவிகளும் செய்யவும் நாங்க தயாரா இருக்கோம்...”

- அவர்கள் ராஜேந்திரனின் கடல் ஆராய்ச்சியை பெரிதாக

பொருட்படுத்திடத் தயாராக இல்லை என்பதை இப்படி தெரிவித்தனர். ராஜேந்திரன் அதைக் கேட்டுச் சிரித்தார்.

“ஒ. கே... நீங்க போகலாம்... எனக்கு இந்த நாலுபேர் போதும்” என்று மிஞ்சி நின்ற நான்கு பேரைப் பார்த்தார்.

அவர்கள் ராஜேஷ் - நிர்மலா, கன்யா - மூர்த்தி என்கிற இரண்டு காதல் ஜோடிகள்.

# 2

பூமியில் கடல் ஒரு மிகப்பெரிய விசித்திரமாகும். மழை என்கிற ஒன்றுக்கு ஆதாரமே கடல்தான்... இந்த மழையும் கூட நிலத்தின் மேல் பெய்வதை விட அதிகமாக கடலில்தான் பெய்கிறது. இதனால் பெருகும் நீர் மட்டத்தை அண்டார்ட்டிகா கண்டம் உறைய வைத்து பனிமலைகள் ஆக்கி சமாளிக்கிறது. இப்படி உறைந்து போய்விடும் ஒரு தன்மை கொண்ட நிலப்பகுதி மட்டும் இந்த பூமியில் இல்லாமல் போயிருந்தால், இந்த பூமியில் இப்போதுள்ள அளவு நிலப்பரப்பே இருக்காது. அவ்வளவும் தண்ணிருக்குள் மூழ்கி பூமி என்றாலே அது ஒரு நீர்ப்பந்து என்று சொல்லும் ஒரு நிலை உருவாகிவிடும்.

ஒரே ஒரு மனித உயிர்கூட அதன்பிறகு இந்த பூமியில் வாழ முடியாது. விலங்குகள், தாவரங்கள்கூட அழிந்துவிடும்... பூமி முழுக்க நீரை கற்பனையாவது செய்து பார்க்க முடியுமா?

அவன் பெயர் வின்செென்ட். பார்ப்பதற்கு கன்னங்கரியவனாக - ஆனால் காக்கி பேண்ட், காக்கிச்சட்டை என்று போட்டுக் கொண்டு ஒரு வயர்மேன் போல இருந்தான்.

அந்த காலை வேளையில் ஸ்விம் சூட், ஆக்சிஜன் சிலிண்டர், சீத்ரூக்ளாஸ், சீத்ரூ புல்லட், வாட்டர் ப்ரூஃப் டார்ச் என்று கடலுக்கடியில் திரிபவர்களுக்கான உடை மற்றும் பொருட்களோடு வந்து நின்ற அவனை பேராசிரியர் ராஜேந்திரனே எதிர்பார்க்கவில்லை.

“என்ன சார் பாக்கறீங்க... எல்லாம் ரெடி சார். மொத்தமா நாலு செட் இருக்குதுங்க. நம்ம கடலாடிட்டு வர ஸ்டீமர் எஞ்சின் போட்டும் ரெடி...” - என்று மார்பு நிமிர்த்தினான்.

“நான் உன்னை ஒன்பது மணிக்குத் தானே வரச் சொன்னேன். ஏழு

மணிக்கே வந்து நிக்கறியே...” என்று எதிர் கேள்வி கேட்டார் ராஜேந்திரன்.

“இப்ப என்ன சார்? கரை மேல ரெண்டு அவர் காத்திருக்கேன். போதுமா சார்...” - என்று வந்த வேகத்தில் திரும்பத் தயாரானான்.

“இருப்பா... உடனே கோவிச்சுக்கறியே...” என்றபடி ராஜேந்திரன் ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

“பின்ன என்ன சார்... ஏழு மணிக்கெல்லாம் போய்ருன்னார் போட் ஒனர். அப்பத்தான் சரியா இருக்கும்னார். நாமளும் உள்ற ரொம்பதுாரம் போகணும். சரியா பத்து பதினோரு மணிக்கு சூரியனும் உச்சிக்கு வந்துடுவான். நீங்க அப்பால ஒரு மூணு நாலு மணி வரை தண்ணீருக்குள்ள இறங்கி - ஏற தோதா இருக்கும். அஞ்சு மணிக்கெல்லாம் இருட்டு கட்டும் முன்ன திரும்பியும் வந்துடலாம்...”

"அப்ப எட்டு மணிக்கு கிளம்பலாங்கறே...?”

"ஆமா சார். சமயத்துல மேகம் மூடிகிட்டு சூரிய வெளிச்சம் சிக்கலாயிடும். கடலுக்குள்ள இறங்கறதுக்கு அப்பால சிரமமா இருக்கும்ல...”

“சரி... புறப்படுவோம். நீ இப்படி உக்காரு... நான் இதோ வந்துடறேன்...” என்றபடியே ராஜேந்திரன் தனது அறைக்கு எதிர் வரிசையில் உள்ள இரு அறைகளைப் போய் ‘காலிங் பெல்’ அடித்து எழுப்பி - கதவு திறந்து ‘குட் மார்னிங் சார்’ குரல்களை ஏற்றுக் கொண்டு விட்டு திரும்பி வந்தார்.

வின்சென்ட் அவர் அறையில் முன் வராண்டாவில் கிடந்த மூங்கில் நாற்காலியில் உட்கார்ந்தபடி இருந்தான். அவனுக்கு எதிரில் சோபா ஒன்று கிடந்தது. அதில் அமர்ந்து கொண்ட ராஜேந்திரன் இண்டர்காம் வழியாக இரண்டு காபி சொன்னார். வின்சென்ட்டுக்கு அவரது உபசார கரிசனம் லேசான நெகிழ்ச்சியைத் தந்தது. ராஜேந்திரன் அவனிடம் ‘சிகரெட் பிடிப்பாயா?’ என்றும் கேட்டார். அவனிடம் ஆமோதிப்பு. உடன் எதிரில் மோடா மேல் கிடந்த ஒரு சிகரெட் பாக்கெட் எடுத்து நீட்டினார். அவனும் சந்தோஷமாக பற்ற வைத்துக் கொண்டு புகைக்கத் தொடங்கினான்.

“உன் பேர் என்னப்பா?”

“வின்சென்ட் சார்..." - அவர்களிடம் ஒரு பரஸ்பரப் பேச்சு ஆரம்பமானது.

“நீ இந்த பாண்டிக் குப்பம் தானா?”

"ஆமாம் சார்... பொறப்பு வளர்ப்பு எல்லாமே பாண்டிக்குப்பம்தான் சார்...”

“உங்க குப்பத்துல எவ்வளவு பேர் இருக்கீங்க?"

"அது இருக்கும் ஒரு நூறு நூத்திப்பத்து தலக்கட்டு.”

“தலக்கட்டுன்னா...?”

"ஒரு குடும்பம் ஒரு தலைக்கட்டுங்க.."

“ஓ… மொத்தமா ஒரு ஐநூறு பேர் இருப்பீங்களா?”

“இருப்போம் சார்...”

"எல்லாருக்கும் மீன் பிடிக்கறதுதான் தொழிலா...?"

“வேற எங்களுக்கு என்ன சார் தெரியும். இந்த கடல்தான் எங்களுக்கு அம்மா, அப்பா, வாத்யார், கடவுள் எல்லாம்... “

“ஒரு நாளைக்கு எவ்வளவு கிடைக்கும்?”

“'அது சொல்ல முடியாது. ஒரு நாள் போட்டு கொள்ளாதபடி மீனுங்க மாட்டும். ஒரு நாள் சப்பை மீன்கூட மாட்டாது... சமயத்துல சங்குங்க சிக்கும். எறாலுங்க சிக்கும். எங்க பொழப்பு ஒரு அமாவாசை, பௌர்ணமி சார்...”

“அப்படின்னா...?”

“ஒருநாள் ‘ஓஹோ’ன்னு இருக்கும். ஒருநாள் ஒண்ணும் இருக்காது. அதைத்தான் அப்படிச் சொன்னேன்.”

"ஆமா.. இந்த கடற்கரையோரமாவே இருக்கே நீ... இந்த கடலுக்குள்ள இறங்கி உள்ளல்லாம் போய்ப் பாத்துருக்கியா?”

“ஆழமாவா?”

“ஆமா...”

"எங்கசார்… போட்ல போவோம். வலை வீசுவோம். அப்ப போட்டுக்கு அடியில சில சமயங்கள்ல அது சிக்கிக்கும். அப்ப அதை எடுத்து உடறதுக்காக கடலுக்குள்ளே இறங்குவோம். உள்ளல்லாம் போகமாட்டோம்.”

“ஒருத்தர் கூடவா?”

"அப்படி சொல்ல முடியாது சார்… ஆத்தியப்பன்னு ஒருத்தர் இருக்கார். அவருக்கு இப்ப வயசு என்ன தெரியுங்களா?”

“என்னக் கேட்டா...”

“இல்ல சும்மா தெரிஞ்சுக்குங்க... அவருக்கு வயது எழுபத்தி இரண்டு. இவர் மட்டும் பௌர்ணமிக்கு பௌணர்மிதான் சார் கடலுக்குப் போவார். அதுவும் தனியாத்தான் போவார். கேட்டா முத்துக்குளிக்கறேம்பார். யாரையும் கூட்டு சேர்க்க மாட்டார். சேர்த்தா இவர் எப்படி முத்துக்குளிக்கிறாங்கறது வெளிய தெரிஞ்சு போயிடுமாம். ஆனா சார்... கரைக்கு வந்தாரோ இல்லையோ... எங்க இருந்தோ காருங்களா வரும். கோட் சூட் போட்ட ஆளுங்களா வந்து இறங்குவாங்க. இவரும் அவங்களோட போயிடுவார். பொறவு அடுத்த பௌர்ணமிக்கு முதல் நாள்தான் வருவார்னா பாத்துக்குங்களேன்...”

வின்சென்ட் கேஷுவலாக சொன்னதில் ராஜேந்திரனுக்குத் தேவையான ஒரு செய்தி அகப்பட்டு விட்டது போல அவர் உணர்ந்தார்.

"ஆமா... இப்ப அந்த ஆத்தியப்பனை நான் பார்க்க முடியுமா?” என்று திருப்பிக் கேட்டார்.

“இப்பவா...? முடியாது சார். அவரை பாக்கணும்னா பௌணர்மிக்கு முத நாள்தான் பாக்கலாம். பௌர்ணமி அன்னிக்கு காலைலயே ஐயா அவரோட போட்ல கடலுக்கு கிளம்பிடுவாரு. எங்களையெல்லாம் பார்த்தாலும் பேசமாட்டாரு. விறைப்பா வருவாரு... போவாரு...”

“ஐ... சீ...”

“உங்களுக்கு எதுக்கு சார் அவர்... கடலுக்குள்ளே இறங்கறவர்ங்கறதாலே உங்களுக்கு ஏதாவது தகவல் தெரியுமான்னு பாக்கறீங்களா?”

“அ… ஆமா...”

"அவர் கேட்டால்லாம் சொல்ல மாட்டார் சார்... சரியான திமிரு பிடிச்சவர்... நல்லா பழகின எங்க கிட்டேயே பேசாதவர் நீங்க கேட்டுத்தானா பதில் சொல்லப் போறார்...”

வின்சென்ட் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கிற மாதிரிதான் இருந்தது.

தீவிரமாக யோசிக்கத் தொடங்கி விட்டார் ராஜேந்திரன்.

“சார்... என்ன சார் யோசனை? அவரை விட்டுருங்க… வேற எதுனா கேளுங்க. சொல்றேன்.”

"வேற... வேற... ஆங்...! இந்த கடல் பகுதியில உங்க குப்பத்து ஆட்கள்தான் மீன் பிடிப்பாங்களா… வேற யாரும் வர மாட்டாங்களா?”

"கிட்டத்தட்ட அப்படித்தான் சார்... நாங்க இந்த சமுத்துரத்துல நேரா எவ்வளவு தொலைவு வேணா போய் வரலாம். ஆனா சைட்ல இரண்டு பக்கமும் மூணு மைல் தான் எங்க எல்லை. அதுலையும் வலது பக்கமா போனா தொலைஞ்சோம். சேவியர் முதலாளி ஆளுங்க நாயுங்களை சுட்ற மாதிரி சுட்றுவாங்க...”

அப்படியா... ஏன் அப்படி?”

“அது அவங்க ஏரியா... அங்க எப்படி நாங்க மீன் பிடிக்கலாம்?"

“கடல் எல்லாருக்கும் பொதுதானே?"

“என்ன சார் நீங்க... ஊருக்குள்ள ரவுடிப் பசங்க இருந்துகிட்டு இது என் ஏரியா - எங்க வந்தேன்னு கேக்கறதில்லையா? அப்படித்தான் சார் இதுவும்…”

“போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுக்கலாமே...”

“அடுத்த பத்தாவது நிமிசம் கொடுத்தவர் உசுர் போய்டும். அப்படியும் ஆகியிருக்குதே… வேலப்பன்னு எங்க குப்பத்துல ஒருத்தன்... சேவியர் ஆளுங்க கிட்ட முறைச்சிகினான்... ‘நான் போய் கலெக்ட்ராண்டையே மனு தர்றேன்’னு போனான். மனு தந்துட்டு வந்துக் கிட்டிருந்தவன் மேல எங்க இருந்தோ ஒரு லாரி வந்து மோதிடுச்சு. கடைசில

ஆக்சிடெண்ட்டுல செத்துட்டதா கேஸ் எழுதி ஊத்தி மூடிட்டாங்க. அதெல்லாம் பெரிய கொடுமை சார்...”

வின்சென்ட் சொல்லி கொண்டே போனதில் அந்த கடற் பிராந்தியம் எப்படிப்பட்டது என்பது அங்கு நிலவும் ஏற்றத் தாழ்வுகளும் ராஜேந்திரனுக்குள் ஏதோ செய்தன.

அப்போது "ஹலோ சார்… ஹலோ புரொபசர் என்றபடியே ராஜேஷ், நிர்மலா, கன்யா, மூர்த்தி என்கிற அந்த நான்கு பேரும் வந்தனர். நான்கு பேரிடமும் சிக்கென்ற ஜீன்ஸ் உடை. முகத்தில் கூலிங் கிளாஸ். தோளில் தொங்கும் கேமராகூடு.

“வாங்க… உக்காருங்க… இவர் மிஸ்டர் வின்செண்ட். இந்த பாண்டிக்குப்பத்து ஆள். நீங்க வர்ற வரை இவர் வாயைத்தான் கிளறிக்கிட்டிருந்தேன். இந்த பாண்டிக்குப்பம் பத்தி... அப்புறமா... பக்கத்துல சேவியர்ங்கறவர் ஆளுங்க பத்தியெல்லாம் சொல்லிட் டிருந்தார். வெரி இன்ட்ரஸ்ட்டிங்...” - என்று ராஜேந்திரன் அவர்களுக்கு வின்சென்டை அறிமுகம் செய்தார். வின்சென்ட்டும் அவர்களைப் பார்த்து சிரிக்க நடுவில் காபி வந்தது. இரண்டு கப். ஆனால் அங்கே ஆறுபேர்.

“பேரர்... இன்னும் நாலு காபி...” என்றார் ராஜேந்திரன்.

அப்போது கன்யாவின் செல்போனில் அழைப் பொலி.

“யெஸ் மம்மி... நான் கன்யாதான் பேசறேன்.” - என்று ஆரம்பித்தவள் அங்கிருந்து விலகி தனியே சென்றாள். அதன்பிறகு அவள் பேசுவது காதில் விழவில்லை. ஆனால் அவள் ஆவேசமாக, கெஞ்சலாக என்று பல பாவனைகளில் பேசுவது மட்டும் தெரிந்தது. பின் சில நிமிடம் கழித்துத் திரும்பி வந்தாள். முகத்தில் சோகம்.

“யெஸ் கன்யா... எனிதிங் சீரியஸ்...?”

“கொஞ்சம் அப்படித்தான் புரொபசர். 'அட்வன்சர்’ங்கற பேர்ல. நான் கடல்ல ஆராய்ச்சி செய்யறது அம்மாக்கு பிடிக்கலை. யாரோ ஒரு ஜோசியன் சும்மா இல்லாம எனக்குக் கடல்லதான் கண்டம்னு வேற சொல்லிட்டான். அதான் அம்மா ‘வேண்டாம் திரும்பிடு’ங்கறாங்க...”

கன்யா பேசியது ராஜேந்திரனைக் கொஞ்சம் கலக்கியது. கவலையோடு பதிலுக்கு பார்த்தார். தன் பாதி நரைத்த கிராப்புக்கு சுண்டு விரால் ஒரு

மாதிரி சொரிந்து கொண்டார்.

“என்ன சார்... கன்யாவும் பிச்சுக்குவான்னு நினைக்கறீங்களா... நிச்சயமா போகமாட்டா... நானும் அவளும் விடிய விடிய பேசி ஒரு முடிவோடதான் வந்துருக்கோம்” - என்று அவளுக்காக வக்காலத்து வாங்கினான் மூர்த்தி.

ராஜேஷூம், நிர்மலாவும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டனர். அவர்களுக்கு சற்று தூரத்தில் ஒரு மூவி கேமரா இருந்தது.

மிகஅட்வான்ஸ் டெக்னாலஜியில் உருவாக்கப்பட்டது அது. வெளிச்சம் எவ்வளவு குறைவாக இருந்தாலும் அதுவே அட்ஜஸ்ட் செய்து படம் எடுத்துவிடும். ராஜேஷ் போய் அதை எடுத்து வந்து கண்களுக்கு முன்னால் தூக்கிப் பிடித்து அமர்ந்திருப்பவர்களைப் படம் பிடிக்கத் தொடங்கி விட்டான்.

அப்படியே படம் எடுத்தபடியே பேசினான். "புரொபசர் சார்... கொஞ்சம் சேர்ந்து உட்காருங்க... இப்ப நான் ஷூட் பண்ற இந்த காட்சியெல்லாம் ஜாக்ரபி சேனல்ல வரப்போகுது. உலகமெல்லாம் பாக்கப் போகுது. இப்ப இங்க வியூ பண்ற விஷயம் மட்டுமில்லை; கடல் மேல, கடலுக்குள்ள நமக்கு ஏற்படப் போகிற எல்லாவித அனுபவங்களையுமே இந்த கேமரா சுருட்டப் போகுது. முத்துக்கோட்டைங்கற ஊர் இருந்திருந்தாலும் சரி, இல்லாம இருந்தாலும் சரி. தமிழ்நாட்டுல ஒரு குரூப், இண்டிவியூஜிவலா ரிசர்ச் மைண்டோட துணிச்சலா கடல்ல இறங்கினாங்கங்கறது ஒரு ரிமார்க்கபுள் ரிக்கார்ட். இன்ஃபேக்ட் நம்ம அட்வென்ச்சரோட தொகுப்பை எல்லாம் ஒரு சி.டி.ஆக்கி, அதை சேனலுக்குக் கொடுக்கும்போது அவங்க அசந்து போகணும்.

கமான்... மிஸ்டர் மூர்த்தி. நீங்க கன்யா தோள் மேல கைபோட்டு போஸ் கொடுங்க... ப்ளீஸ்... பை த பை நம்ம அட்வென்ச்சரோட விலை எனக்குத் தெரிஞ்சு சேனல் காஸ்ட்படி மினிமம் ஒரு லட்சம் டாலர். தட் மீன்ஸ் இண்டியன் மணில ஐம்பது லட்சம் ரூபாய். நாம அஞ்சு பேர் இருக்கோம்... தலைக்கு பத்து லட்ச ரூபாய் நிக்கும்...”

- ராஜேஷ் தன் சேனல் கனவை சொல்லியபடியே அப்படியே அவர்களை வாரிச் சுருட்டினான். பிறகு வின்சென்ட்டையும் குளோஸ் அப்பில் படம் பிடித்துக் கொண்டான். அப்போது வின்சென்ட் ஆவலாதியோடு “சார்... என்ன சார் அம்பது லட்ச ரூவா... அது இதுன்னீங்க... அப்புறம் தலைக்கு பத்து லட்சம்னீங்க... என்னையும் சேர்த்தா ஆறு பேர் சார். என்னையும்

கொஞ்சம் கவனிங்க சார்...” என்றான்.

ராஜேஷ் காமராவை ஆஃப் செய்தபடியே சிரித்தான். பிறகு “அதாவது மிஸ்டர் வின்சென்ட். உங்களுக்குத்தான் தினமும் போட் வாடகை, அப்புறம் சிகரெட், சாப்பாடுன்னு எல்லா செலவையும் நாங்களே ஏத்துக்கறோமே... நாங்க பண்ணப் போறது ஒரு அட்வென்ச்சர். அதெல்லாம் என்னன்னே உங்களுக்குத் தெரியாது. பேசாம வாங்க...” - என்று சொல்லிக் கொண்டே “புரொபசர் சார்... நாம புறப்படலாம்...” என்றான்.

அவரும் தீவிரமான சிந்தனையோடு உடை மாற்றிக் கொண்டு புறப்படத் தயாரானார்.

# 3

'பூமியின் நிலமட்டத்தைக் கணக்கிட கடல்நீர் மட்டத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். அதைக் கொண்டுதான் மலைகளின் உயரத்தைக் கணக்கிடுகின்றனர். அதே சமயம் கடல் மட்டத்துக்கு கீழே எவ்வளவு ஆழத்துக்கு தண்ணீர் உள்ளது என்று கணக்கெடுத்தபோது பசிபிக் பெருங்கடல் கணக்கெடுக்க வந்தவர்களையே ஒரு வழி பண்ணி விட்டது. கிட்டதட்ட பன்னிரெண்டு மைல் ஆழத்துக் கெல்லாம் பசிபிக் கடலுக்குள் செல்ல வேண்டி வந்தது. அப்போது கடலுக்குள்ளேயே பல மலைகள் இருப்பதையும் கண்டனர்.

கீழே போகப் போக அழுத்தம் ஏற்பட்டு சிலருக்கு தலையே வெடித்துவிடும் போலெல்லாம் தோன்றியது. எனவே போனவரை போதும் என்று திரும்பி விட்டனர். திரும்பும் வழியில் அவர்கள் விதம்விதமான மீன் கூட்டத்தையும், ஆமைகளையும், ஆக்டோபஸ் போன்ற வினோத ஜீவன்களையும் பார்த்து விக்கித்துப் போய் விட்டனர்.

அப்போதுதான் அவர்கள் இன்னொரு உண்மையையும் கண்டறிந்தனர். கடலுக்குள் வாழும் ஜீவராசிகள் எதுவும் பெரும்பாலும் தூங்குவதேயில்லை. வாழ்நாள் எல்லாம் விழித்திருக்கின்றன என்பது எத்தனை ஆச்சரியம்.

டற்கரையில் காத்துக் கொண்டிருந்தது ஸ்டீமர். ஒரு இடத்தில் நிற்காமல்

க அசைந்தபடியே இருந்தது. அதில் ஏறி அமர்வதற்குள் ஆடையில் சரிபாதி நனைந்து விட்டது.

காற்று 'ஊ... ஊ...' என்று ராகம் போட்டபடி வீசி கொண்டிருக்க, வின்செண்ட் சிலுவை போட்டு கொண்டே போய் ஸ்டீமரை ஸ்டார்ட் செய்தான்.

அதுவும் ‘தட் தட்’ என்று பின்பாகத்தில் பால் நுரையாக கடல் நீரைப் பெருக்கியபடியே சீற ஆரம்பித்தது. புரொபசர் ராஜேந்திரன் காம்பஸ் எடுத்து வந்திருந்தார். அதன் முள் வடக்குத் திசையையே காட்டிக் கொண்டிருக்கும். அதை கொண்டு செல்லும் திசையும் வடக்கு என்று புரிந்து கொண்டார்.

ஸ்டீமரும் அசுர வேகத்தில் பறந்தது. வின்செண்ட்டிடம் ஒருவித இறுக்கம். ராஜேஷ் கேமராவால் படம் பிடித்தபடி தலைக்கு பத்து லட்சம் என்று சொன்னது அவனைப் பாதித்திருக்க வேண்டும். அதை ராஜேந்திரனும் உணர்ந்தது போல ராஜேஷ் அருகில் சென்றார்.

“வாங்க சார்... “

“என்ன வாங்க சார்... நீ எதுக்கு ராஜேஷ் ஜாக்ரபி சேனல் மேட்டரெல்லாம் பேசினே...?"

“என்ன சொல்றீங்க சார்?"

“அந்த வின்செண்ட்டைப் பார். அப்செட் ஆயிட்டான். ஆக்ச்சுவலா அவன் தயவிருந்தாதான் நாம இந்த கடல் ஆராய்ச்சியை நல்லபடியா பண்ணி முடிக்க முடியும்...”

“சார்... அவன் ஒரு போட்மேன் - அவனால என்ன சார் பண்ண முடியும்?”

“என்ன பண்ண முடியுமாவா...? சரிதான்... சுத்திப் பாரு...”

“பர்க்க என்ன இருக்கு?... தண்ணிதான்...”

“இந்த தண்ணி சாதாரண தண்ணியில்லை. உப்புத் தண்ணி. இங்க என்ன இருக்கு; எந்தப் பக்கம் போகணும்ங்கறதுல இருந்து எல்லாம் அவனுக்குத் தான் தெரியும். ஒண்ணு நல்லா தெரிஞ்சுக்கோ... பிரயாணம் பண்ணும்போது பஸ் டிரைவரோ - கார் டிரைவரோ அவங்கதான் தெய்வம். அதே போலத்தான் இங்கேயும்...”

“சார்… இப்ப என்ன பண்ணச் சொல்றீங்க?"

“நான் அவனையும் நம்ம டீம்ல சேர்த்துக்க விரும்பறேன் ராஜேஷ்...”

"டீம்ல சேத்துக்கலாம். ஆனா நமக்கு கிடைக்கப் போற பணத்தை அவனுக்கும் ஷேர் பண்ணித்தர நான் ஒத்துக்க மாட்டேன்...”

“இப்படிச் சொன்னா எப்படிப்பா... அவனை சாதாரண கடலாடியா பாக்காதே... அவனுக்குத்தான் இந்தக் கடல் பகுதியப் பத்தி தெரியும்...”

“சார்... நானும் மறுக்கல - அதுக்குத்தான் கூலி கொடுத்துடப் போறோம்... வேணும்னா அஞ்சோ பத்தோ சேத்து போட்டுத் தருவோம்...'

“அஞ்சோபத்தோ...?”

"ஆமாம்... பின்ன என்ன ஆயிரமா? - ராஜேஷ் இதழ்க்கடையில் கிண்டல் தொக்கி நின்றது. எஞ்சின் சுக்கான் அருகே நின்றபடியே ராஜேந்திரன் தனக்காகப் பேசுவதை பார்த்துக் கொண்டே இருந்தான் வின்சென்ட்.

கடல் வெளியிலும் நிறைய டால்ஃபின்கள் போட்டுக்கு பக்கவாட்டில் போட்டின் வேகத்தோடு போட்டி போட்டு நீந்நி வந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்து புகைப்படம் எடுக்கத் தொடங்கி விட்டாள் நிர்மலா.

கன்யா ஒரு பைனாகுலரை எடுத்துக் கொண்டு அப்படியே சுற்றி ஒரு பார்வை பார்த்த போது ஒரிடத்தில் தீவு ஒன்று அடர்த்தியான பசுமையோடு கண்ணில் பட்டது.

"வாவ். ஏதோ ஒரு தீவு...” என்றாள் உற்சாகமாக.

“ஏதோ ஒரு தீவு இல்லம்மா... அதுக்குப் பேர் பேய்த்தீவு...” என்றான் வின்சென்ட்.

"பேய்த்தீவா...?”

“ஆமாம்மா... பயந்துட்டீங்களாக்கும். நிஜமாலுமே அங்க பேய் இருக்கறதாலதான் அந்த பேர் வந்துச்சுன்னு சொல்றாங்க...”

"பேய் அங்க என்ன பண்ணுது?"

"யாருக்குத் தெரியும். இந்த கடல் மேல செத்துப் போறவங்க உசுர்தான்

அங்க பேயா நடமாடறதா சொல்வாங்க. அங்க ஒரு சர்ச் இருக்குது. அதுல ஒரு ஒத்தக் கண் பாதிரியார் ஒருத்தர் இருக்காரு... ஒரே ஒரு போட்டோட அவர் மட்டும் அங்க இருக்காரு. தனியா சமைச்சு சாப்டுகிட்டு எப்படித்தான் அங்க அவர் இருக்காரோ… ஹாம்...!"

வின்சென்ட் தொட்டுத் தொட்டுப் பேசியதில் புதிய புதிய செய்திகள். அதுதான் சமயமென்று போட்டும் ‘ஆஃப்’ ஆனது போல நின்று போனது. வின்சென்ட் உடனேயே திரும்பவும் 'ஆன்’ செய்ய முயன்றான். ஆனால் திணறியது. அப்போதுதான் ‘ஃப்யூயல் இண்டி கேட்ட’ரைப் பார்த்தான். அதில் டீசல் தீர்ந்து விட்டிருப்பதற்கான அறிகுறி.

அவன் முகத்தில் குறுக்கும் நெடுக்குமாக அதிர்ச்சி ரேகைகள் ஒடத் தொடங்கின. ராஜேந்திரனும் ஓடி வந்தார்.

“என்னப்பா... என்ன நின்னுடிச்சு?”

“அட.... என்னதத சார் சொல்வேன். டீசல் தீர்ந்து போச்சு சார்...”

“டீசல் தீர்ந்து போச்சா... சரிதான் போட்டை எடுக்கும்போது பாக்கலியா நீ...”

“பாத்தேன் சார். நாம போய்ட்டு திரும்புறவரை தாக்குப் பிடிக்கும்னு நம்புனேன். அது தப்பா போச்சு. ”

“என்னய்யா இப்படி சொல்றே... இப்ப என்ன பண்ணப் போறோம்?” - புரொபசர் ராஜேந்திரன் பதறியபடிதான் கேட்டார்.

“என்ன சார் பண்ண… எப்படியாவது... தா தெரியுத அந்த தீவு... அதுல ஒதுங்கணும். நிச்சயம் பாதிரியர் நமக்கு ஏதாவது உதவி செய்வார் சார்...” என்றான் வின்சென்ட்!

ராஜேஷ் - நிர்மலா ஜோடி வெலவெலத்து விட்டது. ஆனால் கன்யா - மூர்த்தி கலங்கவில்லை. தீவைப் பார்த்தனர்.

ஸ்டீமர் படகோ நடுக்கடலில் காற்றுக்கு ஏற்ப இப்படியும் அப்படியும் ஆடியது. ராஜேந்திரன் கொஞ்சம் வெறுத்துக் கூடப் போனார். எரிச்சலுடன் வின்சென்ட்டை பார்த்தார். அவனோ பார்வையை திருப்பிக் கொண்டான். அவனது செய்கை - உண்மையில் ஸ்டீமரில் டீசல் தீர்ந்து விட்டதா; இல்லை அவன்தான் ஏதாவது நாடகம் போடுகிறானா என்கிற சந்தேகத்தைக் கிளப்பியது.

"புரொபசர் சார்… அடுத்து நாம என்ன பண்ணப் போறோம்?" மூர்த்தி சாதாரணமாக எந்த கலக்கமும் இல்லாமல் கேட்டான்.

"தெரியலியே மூர்த்தி... இந்தாப்பா வின்செண்ட்... இப்படியா நடுக்கடல்ல எங்களை நிறுத்துவே... இப்ப என்னப்பா பண்றது?" என்று அவனை நோக்கி கத்தினார்.

"அதான் சொன்னேனே சார்... எப்படியாவது அந்த தீவுக்குப் போகணும். அங்க இருக்கற பாதிரியார் உதவி செய்தாதான் ஆச்சு..."

"இப்படி சொன்னா எப்படிப்பா? எங்கள விடு - நீ எப்படி கரைக்குப் போவ...?"

"எனக்கு ஒரு பயமும் இல்ல சார். இதோ இந்த மிதவைய தண்ணில போட்டு இப்படியே அது மேல படுத்து நீந்திகிட்டே நான் போய்டுவேன்..."

"என்ன வின்செண்ட் சொல்றே... நாம இப்ப கிட்டத்தட்ட பத்து பதினைஞ்சு மைல் வந்திருக்க மாட்டோம்...?"

"அட... என்ன சார் நீங்க… நூறு மைலெல்லாம் நீந்தி கரை ஏறுறவங்க உண்டு சார்." - வின்செண்ட் அலட்சியமாக சொன்னான். அவனிடம் துளிகூட தவிப்போ, பயமோ இல்லை.

ராஜேந்திரனின் உள் உணர்வு அவன் வேண்டுமென்றே பொய் சொல்கிறான் என்றுததான் எண்ணியது. ஆனால் மனதுக்குள் ஒடியதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தந்திரமாக ஒரு முடிவு செய்தார்.

"வின்செண்ட்... இப்ப சொல்றேன்... எங்க டீம்ல நீயும் ஒருத்தன். கடலுக்குள்ற முத்துக் கோட்டையைக் கண்டுபிடிக்கறோம் - கண்டுபிடிக்கலை... அது வேற விஷயம். நம்மவரல. ஒரு அட்வென்ச்சர் இப்பவே ஸ்டார்ட் ஆயாச்சு. ராஜேஷ் இப்பவே நீ ஷூட் பண்ணத் தொடங்கிடு. வின்செண்ட்டை ஒரு போட் மேனா நினைக்க வேண்டாம். சொல்லப் போனா வின்செண்ட் தான் நம்ம டீமுக்குத் தலைவர்." - என்று சமயோஜிதமாகப் பேசினார். வின்செண்ட்டிடமும் அது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது.

"அட... என்ன சார் நீங்க... என்னப் போய் தலைவன், தொண்டன்னு கிட்டு... என்னையும் உங்க பார்டனர் ஆக்கிக்குங்க. இந்த கடல்ல எது கிடைச்சாலும் சரி... அதை சமமா பகிர்ந்துக்குவோம்... எனக்கு அது

போதும் சார்...”

“அதான் சொல்லிட்டேனே வின்சென்ட்... ஒரு மணிநேரம் ஓட்ற அளவுக்கு எங்க அட்வென்ச்சரை நாம ரெடி பண்ணினா ஃபாரின் சேனல்ல மினிமம் ஒரு லட்சம் டாலர் கிடைக்கும். நம்ம இந்தியப் பண மதிப்பு 45 லட்சத்துல இருந்து 48 லட்ச ரூபாய்க்குள்ள வரும். நாம ஆறு பேரும் சமமா பகிர்ந்துப்போம்... இப்ப என்ன?” - ராஜேந்திரன் அவனை அப்படியே அள்ளி தன் மேல் பாக்கெட்டில் போட்டுக் கொள்ளாத குறை. ஆனால் ராஜேஷ் அவரைச் சுட்டு விடுவது போலப் பார்த்தான்.

ராஜேந்திரன் ராஜேஷைக் கவனிக்காமல் வின்சென்ட்டிடம் “வின்சென்ட்... இப்ப நாம அந்த தீவுக்குப் போக ஏதாவது வழி பண்ணுப்பா... சீக்கிரம்...” - என்றார்.

“இருங்க சார்... என்ஜின் ரூம்ல அவசர ஆத்திரத்துக்கு பயன்படும்னு ஒரு அஞ்சு லிட்டர் டீசலை எப்பவும் வெச்சிருப்பாங்க. அது இருக்கான்று பாத்துட்டு வந்து ட்றேன்...” - என்று மேலிருந்து கீழ் இறங்கும் படிகள் வழியாக என்ஜின் ரூம் நோக்கிச் சென்றான்.

ராஜேந்திரன் ‘அப்பாடா’ என்று பெருமூச்சு விட்டார்.

நிர்மலா எந்த கிலேசமும் இன்றி கண்ணில் வைத்த பைனாகுலரைக் கீழே வைக்கவில்லை.

கன்யாவும் மூர்த்தியும் கைகட்டியபடியே நின்றிருந்தனர். ராஜேஷ் நெருங்கி வந்தான்.

“என்ன புரொபசர்... எதுக்கு ஒரு போட்மேனை எல்லாம் பார்ட்னரா சேக்கறீங்க...? நான்தான் வேண்டாம்னு சொன்னேனே...” என்று ஆரம்பித்தான். ராஜேந்திரன் மௌனமாக உதட்டுக்கு நடுவில் ஆள்காட்டி விரலை வைத்து ‘எதுவும் பேசாதே’ என்பது போல எச்சரித்தார். வின்சென்ட்டும் “புரொபசர் சார்… டீசல் இருக்குது...” என்றபடியே கேன் ஒன்றுடன் படிகளில் ஏறி வந்தான்.

“வெரிகுட்... முதல்ல ஸ்டீமரை ஸ்டார்ட் பண்ணு. தீவுக்குப் போவோம். அப்புறம் மத்த விஷயங்களை பேசுவோம்...” என்று உற்சாகமானார்.

அடுத்த சில நிமிடங்களில் ‘தட்தட்தட்...' என்று புகையைக் கக்கியபடி ஸ்டீமர் என்ஜின் ஸ்டார்ட் ஆகி கண் எதிரில் தெரிந்த அந்த பேய்த்தீவு நோக்கி ஒடத் தொடங்கியது.

புரொபசர் ராஜேந்திரனும் - அந்த நான்கு பேரும் தீவையே வெறித்துப் பார்த்தனர். புசுபுசுவென்று சவுக்கு மரங்களும், ஏராளமான தென்னை மரங்களும் வளர்ந்திருந்த அழகான வெண்மணல் கடற்கரையும் அங்கே இருந்ததுதான் ஆச்சரியம்.

ஸ்டீமர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றுவிட வின்சென்ட் எல்லோரையும் பார்த்து “உம் குதிங்க...” என்றான். புரொபசர் ராஜேந்திரன் உற்சாகமாகக் குதித்தார். இடுப்பளவு தண்ணிர். பாம்பு நெளிவது போல அலை... நீலம் போட்டுக் கரைத்த மாதிரி தண்ணீர். சிலுசிலு வென்று உடம்பெல்லாம் தந்தியடிக்க விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினார்.

ராஜேஷ் போட்டில் இருந்தபடியே முதலில் ‘ஜூம்’ ஷாட்டில் படம் எடுத்தான். பின் போட்டில் இருந்து குதித்து, தண்ணிருக்குள் நடந்து கரை ஏறுபவர்களை என்று முறை வைத்து ‘ஷூட்’ செய்தான். வின்சென்ட் தன்னை யும் அவன் படம் பிடிப்பான் என்று எதிர்பார்த்தான். ஆனால் நன்றாக ஏமாற்றி விட்டான். கேமராவை தோளில் ஒரு தோல் பைக்குள் வைத்து மூடிப் பிடித்துக் கொண்டு அவனும் தண்ணீரில் இறங்கி நடந்தான்.

படகின் பின்பக்கம் நூறு கிலோ எடையில் நங்கூரம் இரும்புச் சங்கிலிகளோடு சேர்ந்து கிடந்தது. வேண்டா வெறுப்பாக அதைத் தூக்க மாட்டாமல் தூக்கி கடலுக்குள் போட்டு விட்டு வின்சென்ட்டும் கீழிறங்கினான். இறுதி யாக அவர்களைப் பின் தொடர்ந்தான்.

அவர்கள் ஐந்து பேரும் கரை ஏறி வெண்மணல் பரவிக்கிடக்கும் வெளிமேல் நின்று திரும்பி கடலைப் பார்த்தனர்.

அடேயப்பா... எத்தனை அழகு!

இந்த கடல் பகுதியில் இப்படி ஒரு தீவு இருப்பது எப்படி சினிமாக்காரர்களுக்குத் தெரியாமல் போனது என்றும் ஒன்று போலக் கேட்டுக் கொண்டனர். காற்று - விசிலை விழுங்கி விட்ட மாதிரி ‘ஊவ், ஊவ்’ என்றது. அதற்கு நடுவில் 'டாண், டாண்’ என்று மணி சப்தம் ஒலிப்பதும் கேட்டது.

பேய்த்தீவில் இருக்கும் ஒரே ஒரு சர்ச்சின் மணி ஓசைதான் அது. ராஜேந்திரன் தன் கைக்கெடிகாரத்தைப் பார்த்தார். மணி மிகச்சரியாக 12. ‘உச்சிக்கால வழிபாடு நடக்கிறது’ என்று எண்ணிக் கொண்டார்.

இதற்குள் வின்செண்ட்டும் வந்து சேர்ந்தான்.

“வாங்க. மணி சப்தம் கேக்குது. பாதிரியார் இருக்காரு. உச்சி நேரம். போனா சாப்பிடக் கூட ஏதாவது கிடைக்கலாம்…” - என்று விறுவிறுவென நடந்தான்.

மணலில் கால்கள் பதிந்து பதிந்து மண் துகள்களை கெல்லிக் கெல்லி எறிய நடப்பதே சுகமாக இருந்தது.

மண்வெளி ஒரு எல்லையோடு முடிந்துவிட; ஒருவித தடிமனான புற்கள் வளர்ந்த மேடும் பள்ளமுமான நீண்ட நிலப்பரப்பும் அதில் ஏராளமாய் தென்னையும், சவுக்கும் ஒரு ஒழுங்கே இல்லாமல் கன்னாபின்னா வென்று வளர்ந்திருந்தது.

உள்ளே யாராவது புகுந்து கொண்டால் கண்டுபிடிப்பதே சிரமம்… ஒளிந்து கொண்டு நன்றாக கண்ணாமூச்சி விளையாடலாம். அப்படி இருந்தது அந்தச் சூழல். கைகளால் அந்த புதர்களை விலக்கிக் கொண்டு சற்று தூரத்திலும் தீவின் நடுப்பாகத்தில் அமைந்திருந்த அந்த சர்ச்சை நோக்கி முதல் ஆளாக நடந்தான் வின்செண்ட்.

“ராஜேஷ்… இதை எல்லாமும் ‘ஷூட்' பண்ணிக்கோ…” என்று புரொபசர் கூறியதைக் கேட்டு ராஜேஷ் கேமராவை தோல் பையை விட்டு வெளியே எடுத்து ‘ஷூட்’ செய்தபடியே நடந்தான்.

சர்ச்சும் வந்துவிட்டது.

சர்ச் முகப்பில் ஒரு வெள்ளைப் பன்றி ஒன்று இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கமாக ஒடியது.

அந்தத் தீவில் எல்லோரும் பார்க்கும் முதல் விலங்கு… பன்றி புதர் ஒன்றுக்குள் புகுந்து மறைந்து விட்டது. ராஜேஷ் அது மறைவதைத்தான் ‘ஷூட்’ செய்ய முடிந்தது.

சர்ச்சுக்கு இடது பக்கத்தில் மணிக் கூண்டு அமைந்து இருந்தது. தரையில் இருந்து ஐம்பதடிக்கு குறையாத உயரத்தில் சுவர் எழுப்பி அதன்மேல் ஒரு மேடை போல கட்டி அதில்தான் மணியைப் பதித்திருந்தார்கள். அதன் கம்பித் தலை பாகத்தில் இருந்து சங்கிலி ஒரு ஐம்பது அடி நீளத்துக்குக் கீழ் வரை கிடக்க - அதைத்தான் பிடித்துக் கொண்டு ஒருவன் மணி சப்தம் எழுப்பியபடி இருந்தான். அவனைப் பார்க்க வினோதமாக இருந்தான். வின்செண்ட்டே அவனைப் பார்த்து

ஆச்சரியப்பட்டான். அருகே போய்ப் பார்த்துவிட்டு படுவேகமாக திரும்பி ஆர வந்தான்.

ராஜேந்திரன் அதைப் பார்த்துவிட்டு “எதற்கு இத்தனை ஒட்டம்?" என்று கேட்க, வின்செென்ட் முகமே என் வெளிறிப் போய்விட்டது.

“என்னாச்சு வின்செென்ட்?”

“அவன்... அவன்...”

“யார்? அந்த மணி அடிக்கிறவனா?”

"ஆமாம்... அவன் பேர் சிலுவை மணி. அவன் குரல் கடல்ல மூழ்கி செத்தவன். இங்க... இங்க...” வின்செென்ட் சொன்னது இவர்களையும் ஆச்சரியப்படுத்தியது. இவ்வளவும் சர்ச்சின் வாசலில் நிகழ்ந்தது. சர்ச் திறந்தே இருந்தது. அந்தத் தீவில் அதை மூடிவைக்க வேண்டிய அவசியம்தான் இல்லையே...”

“சரிசரி... வா உள்ளே போய் ஃபாதரைப் பார்த்துப் பேசுவோம். அது எப்படிப்பா செத்தவன் உயிரோட வர முடியும்...? நீங்க செத்துட்டதா நினைச்சுக்கிட்டிருப்பீங்க. இவன் இங்க உயிரோட இருந்திட்டிருக்கான்...” என்று சொல்லிக் கொண்டே சர்ச்சுக்குள் கால் வைத்தார் ராஜேந்திரன்.

அப்படி ஒன்றும் பெரிய சர்ச் இல்லை. அங்கிருந்து ஒரு ஐம்பது அறுபதடி தூரத்தில் பாதிரியார் நின்று உபதேசம் செய்யும் ரோஸ்ட்ரம் எனப்படும் மைக்குடன் கூடிய மேடை இருந்தது. ஒரு பக்கத்தில் பாவ மன்னிப்புக் கூண்டு வேறு...

இடையில் ஏராளமான மர பெஞ்சுகள். முன்னால் பைபிள் விரித்து வைக்கத் தோதாக மேஜை இல்லாதபடி ஆரம்பப் பள்ளிகளில் போடப்பட்டிருப்பது போல போடப்பட்டிருந்தது.

யார் வந்து பிரார்த்தனை பண்ணப் போகிறார்கள் என்று இத்தனை மேஜைகளைப் போட்டு வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

வின்செென்ட் நடுவில் உள்ள கார்ப்பெட்டில் விறுவிறுவென்று நடந்து பாதிரியாரைத் தேடிக் கொண்டு போனான். போகும் போதே “ஃபாதர்.. ஃபாதர்...” என்று குரல் கொடுத்துக் கொண்டே போனான்.

மணி சப்தமும் சட்டென்று நின்றது. ஒருவித நிசப்தம். நேர் எதிரில் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டது போன்ற பளிங்குச் சிலை... மிகத் தத்ரூபமாக வடிக்கப்பட்டிருந்தது.

“எங்கே போனார் இந்த ஃபாதர்?” - என்று வின்செனட் நாலாபுறமும் துழாவினான். பதிலுக்கு சர்ச் முகப்பு வழியாக சிலுவை மணி தான் வந்து கொண்டிருந்தான். இடுப்பில் காக்கி அரை டிராயர், மேலே ஒரு கை வைத்த பனியன், தலையிலும், தாடையிலும் முப்பது நாற்பது நாள் முடிக் கூட்டம். கண்களில் ஒரு இனம்புரியாத சோகம். அவன் நடந்து வரும் விதமே அலாதியாக இருந்தது. நடந்து வந்தவன் நேராக இயேசுநாதர் சிலை முன் மண்டியிட்டான். சில வினாடிகள் ஜெபித்தவன், தன் மார்பிலும், தோளிலும் சிலுவை போட்டுக் கொண்டான். பிறகு திரும்பி நடந்து ரோஸ் ட்ரம் மேல் ஏறி நின்றான். ரோஸ் ட்ரம் ட்ராயரில் கறுப்பு அட்டை பைண்டாக பைபிள் இருந்தது. அதை வெளியே எடுத்தவன் ரோஸ் ட்ரம் மேல் வைத்து விரித்தான். பைபிள் வாசிக்கத் தொடங்கி விட்டான். எல்லோருக்கும் வியப்பாக இருந்தது. முணுமுணு வென்று அவன் பைபிள் வாசித்துக் கொண்டே போனதும் ஒன்றும் புரியவில்லை. ராஜேந்திரன் பதிலுக்கு வின்சென்ட்டைத்தான் பார்த்தார். வின்சென்ட்டும் உதட்டைப் பிதுக்கினான். நல்லவேளை அந்த சிலுவை மணி பைபிள் வாசித்து முடித்தான். அதைத் திரும்பவும் மூடி ட்ராயரில் வைத்து விட்டு ரோஸ் ட்ரம்மை விட்டு இறங்கினான். ஒரு எந்திரம் போல இருந்தது அவன் செயல்பாடு.

பின் அங்கிருந்து பக்கத்தில் இருந்த ஒரு அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே போனான். வின்சென்ட்டுக்கு பொறுமை போய் விட்டது. புரொபசர் ராஜேந்திரனோ “வின்சென்ட்... உள்ள போய்ப்பார்... ஆமா... அவனுக்கு என்ன கிறுக்கா... பாதிரியார் எங்க?" என்று அவனிடம் கேள்விகளாய் அடுக்கினார்.

வின்சென்ட் பதில் கூறாமல் சிலுவை மணி நுழைந்தது அறைக்குள் மெல்ல பின் தொடர்ந்தான்.

ஐந்து பேரும் மர பெஞ்சுகளில் கால்வலி தாங்காமல் போய் அமர்ந்தனர். 'திடீர்’ என்று ஒரு அலறல் சப்தம்! வின்சென்ட்தான் திரும்பி ஓடி வந்தபடி இருந்தான்.

கடல் சாம்ராஜ்யத்தில் எண்ணிப் பார்க்க முடியாத அதிசயங்கள் எவ்வளவோ உள்ளன. அதில் ஒன்று கடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் எரிமலைகள் உள்ளுக்குள் தீக்குழம்பு கனன்றபடி இருக்க அந்த மலை முற்றாக கடல் நீரால் மூழ்கடிக்கப்பட்டிருந்தால் அந்த எரிமலை எப்படி தீக்குழம்பை கக்க முடியும்? கடல்நீர் அதை அணைத்து விடாதா? என்று கேட்கத் தோன்றும். உண்மைதான்... கடல்நீர் எரிமலையைக் குமுற விடாதபடிதான் செய்கிறது. மற்றபடி அதனுள் கனன்றபடி இருக்கும் நெருப்பை அதனால் எதுவும் செய்ய முடிவதில்லை.

இதனால் அந்த மலையைச் சுற்றி சில கிலோ மீட்டர் தூரத்துக்கு கடல் நீரே வெதுவெதுப்பாக இருப்பது இன்னொரு ஆச்சரியம். இந்த வெதுவெது நீரில் எந்த ஒரு மீனோ, ஆக்டோபஸோ, கடற்பசுக்களோ, ஆமைகளோ - நீந்தி வாழ முன் வராததால் இந்தப் பகுதி துளியும் ஆபத்தில்லாத - மனிதர்கள் நீந்தி மகிழத் தோதான பகுதியாக உள்ளது. ஆனாலும் கடலில் அகழ்வாய்வு செய்பவர்கள் கூட எரிமலையை ஒட்டிச் சென்று ஆய்வு செய்ய அச்சப்படுகிறார்கள். சில இடங்களில் வெந்நீர் கொப்புளங்கள் குமிழ் விட்டு வெடித்தபடி மேலேறுவதால் உடன் சூடு ஏறிப்போய் உள்ளே நீந்த முடியாமல் போகிறது. நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்த கடல் பிராந்தியத்தில் உள்ளே இறங்கிச் சென்று பின் பிணமாகத்தான் மிதந்துள்ளனர்!

தலை தெறிக்க ஓடி வந்த வின்சென்ட் புரொபசர் ராஜேந்திரன் மேல் முட்டி மோதி நின்றான்.

“என்ன வின்சென்ட்... என்ன ஆச்சு?"

“சார்... சார்... உள்ற...”

“உள்ற என்ன?”

"அதை ஏன் சார் கேக்கறீங்க. இந்த சர்ச் ஃபாதர் பெர்னாண்டோங்கறவரே சிலுவைல அறையப் பட்டிருக்கார் சார்." - என்றான்.

ஐவருக்குமே 'பக்’கென்றது. அதுவரை பைனா குலரில் கண்ணும் கருத்துமாய் இருந்த நிர்மலா முதல் தடவையாக அச்சத்தோடு ராஜேஷை ஒட்டிக் கொண்டு நின்றாள். கன்யாவும், மூர்த்தியுடன் இழைந்து நின்றாள். புரொபசர் ராஜேந்திரனுக்கோ தப்புத்தப்பாகவே எல்லாம் நடப்பது போல ஒரு பிரமை. நெடுநேரம் அவர்களுக்கு நடுவில் அமைதி

நிலவியது. மெல்ல அதன் நடுவே பிரக்ஞை கலைந்த ராஜேந்திரன் ராஜேஷைப் பார்த்து கேமராவை ‘ஆன்’ செய்யச் சொல்லி சமிக்ஞை கொடுத்தார். பிறகு அவனையும் மற்றவர்களையும் வரச் சொல்லிவிட்டு முன்னே சென்றார். திறந்து கிடந்த அறைக்குள் முதலில் அவர் நுழைய பின்னாலேயே ராஜேஷ் ‘ஷூட்' செய்தபடி சென்றான்.

அது ஒரு பெரிய அறை நடுவில் கண்ணாடிக் கூறை. எனவே சூரிய வெளிச்சம் நன்றாக விழுந்தபடி இருந்தது. ‘பளிச்’சென்று எல்லாமே தெரிந்தன. அறை மையத்தில் ஒரு டேபிள் சேர். சேரில் பாதிரியார் பெர்னாண்டோ அமர்ந்து ஏதோ எழுதியபடிதான் இருந்தார். அவர் அருகே நின்ற நிலையில் சிலுவை மணி.

புரொபசர் ராஜேந்திரன் வருவதையும் பின்னால் ராஜேஷ் படம் பிடித்தபடி வருவதையும் பார்த்த பாதிரியார் புன்னகையோடு நிமிர்ந்தார்.

“வெல்கம் சில்ட்ரன்...” என்றார் மிக மிக இதமான குரலில்.

“ஃபாதர்...” - ராஜேந்திரனும் ஃபாதரைப் பார்த்து பரவசப்பட பின்னால் வந்த வின்சென்ட் வாயைப் பிளந்து விட்டான்.

“வெல்கம் சில்ட்ரன்ஸ்... வெல்கம்... கோஸ்ட் ஐலாண்ட் சார்பா உங்களை வரவேற்கறதுல மகிழ்ச்சி. ஆமா எவ்வளவு பேர் வந்திருக்கீங்க...”

- ஃபாதர் இதமாக விசாரித்தார்.

"நாங்க மொத்தம் ஆறு பேர் ஃபாதர்...”

“ஓ... வெரி கிளாட். வெரி கிளாட்... எனக்கு கொஞ்ச நாளாவே உடம்பு சரியில்ல. இங்க ஆராதனைகளை இந்த சிலுவை மணிதான் பார்த்துக்கறான். அதான் நான் பிரேயர் ஹாலுக்கு வரலை” - என்ற ஃபாதர் சிலுவை மணியைப் பார்த்து தன்னை தூக்கிக் கொண்டு பிரார்த்தனை ஹாலுக்கு போகச் சொன்னார். அடுத்த நொடி அவன் அவரை அப்படியே சேரோடு சேர்த்து தூக்கிக் கொண்டு அவர்களை விலக்கிக் கொண்டு முன்னால் நடந்தான்.

பிரார்த்தனைக் கூடத்தில் ரோஸ் ட்ரம் அருகே அவரை சேரோடு உட்கார்த்தி வைத்தான்.

"நீங்கல்லாம் இப்படி முன்னாடி சேர்ல உக்காருங்க. கொஞ்சநேரம் பேசுவோம். சில்ட்ரன்... நீங்க இன்னிக்கு சாப்பிடலாம் இல்லையா?" ஃபாதர் இதமான குரலில் மிகுந்த உபசரணையோடு கேட்டார்.

வின்சென்ட்டிடம் பேச்சு மூச்சில்லை.

அவன் பார்த்த போது சிலுவையில் அறையப் பட்டிருந்த ஃபாதர் எப்படி இப்போது நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் என்பதில் அவனுக்குள் குழப்பம்.

ஃபாதரோ அதற்குப் பதில் கூறுவது போல வின்சென்ட்டைப் பார்த்தவர் –

"என்ன வின்சென்ட்... என்னை சிலுவைல பாத்தியா?"

"அ… ஆமா… ஆமா... ஃபாதர்."

"அது சும்மா. மேஜிக். பயப்படாதே. ஆங்... சிலுவை மணி நீ போய் சமையலைக் கவனி. அரைமணி நேரத்துல இவங்க டைனிங் டேபிளுக்கு வந்துடுவாங்க. போ..." என்றார். அவனும் எதுவும் பேசாமல் திரும்பிச் சென்றான்.

"ஃபாதர்… அவன் என்ன ஊமையா?" புரொபசர் ராஜேந்திரன்கொஞ்ச சகஜத் தன்மையோடு பேச்சை ஆரம்பித்தார்.

"கிட்டதட்ட அப்படித்தான்... ஆனால் பைபிள் மட்டும் படிப்பான்..."

அவன் செத்துட்டதா வின்சென்ட் சொன்னான்..."

"அஃப்கோர்ஸ்... செத்த பிணமாத்தான் இந்த தீவில அவன் பாடி கரைல ஒதுங்கினது. நான் எடுத்து அடக்கம் பண்ணப் போனப்போ கண் திறந்து பார்த்து என்னையே வெலவெலக்க வெச்சுட்டான்..."

ஃபாதர் சொன்னது எல்லோரையும் உசுப்பேற்படுத்தியது.

"அது எப்படி ஃபாதர்...?" - ராஜேந்திரன் விடவில்லை.

"எப்படின்னா என்ன சொல்ல... சிலுவை மணி கான்ஷியல் இல்லாம இருந்திருக்கலாம். இல்லைனா இந்தத் தீவுல திரியற கோஸ்ட்டுங்க எதோட ஆவியாவது இவனை ஆக்குபை பண்ணியிருக்கலாம்..."

“என்ன ஃபாதர் சொல்றீங்க… இந்த தீவுல ஆவிங்க சுத்தி வருதா?”

“இல்லேன்னா எதுக்கு இந்த தீவுக்கு பேய்த் தீவு’ன்னு பேர் வைக்கணும்... சொல்லுங்க. பார்ப்போம்...”

“நம்ப முடியல... ஆமா நீங்க எப்படி இங்க தனியா?"

“ஏன்... இருக்க முடியாதா...? எனக்கு தேவன் துணை இருக்கு. அப்புறம் என்ன கவலை?”

"எப்படி ஃபாதர் பொழுது போகுது?”

“பொழுதுக்கென்ன... அதுபாட்டுக்கு போயிடும். ஆமா... நீங்கள்லாம் சும்மா சுத்திப் பார்க்க வந்தீங்களா?”

“இல்ல ஃபாதர், நாங்க கடல்ல ஆராய்ச்சி செய்றவங்க...”

“ஓ...? மீன்களோட வாழ்க்கையைப் பற்றின உங்க ஆராய்ச்சியா...”

“இல்ல ஃபாதர்... எங்க ஆராய்ச்சியே வேற...”

“என்ன... பவழப்பாறை, பெட்ரோல் ஊற்றுன்னு எதையாவது தேடி வந்திருக்கீங்களா...?”

“ஊஹூம்... ஆமா நீங்க இங்க எத்தனை வருஷமா அதிர் இருக்கீங்க ஃபாதர்...?”

“நான்... நான்... வின்சென்ட் நீயே சொல்லு... உனக்கு நல்லா தெரியுமே...”

ஃபாதர் வின்சென்ட்டை பதில் சொல்லத் தூண்டிவிட்டார்.

"ஃபாதர் எனக்குத் தெரிஞ்சு முப்பது வருஷத்துக்கு மேலா இந்த தீவுல இருக்கார்...”

“முப்பது வருஷம் உனக்குத் தெரிஞ்சு... மிச்சம்...? நான் இந்த தீவுக்கு வந்து ஐம்பத்தி இரண்டு வருஷம் ஆகுது... அதாவது 1953ல வந்தேன். அப்ப எனக்கு இருபது வயசு. அப்பா அம்மா இல்லாத அநாதையான என்னை ஒரு கிறிஸ்தவர்தான் எடுத்து வளர்த்தார். அவர்தான் ஒரு சர்ச்சுல மணி அடிக்கற வேலைக்கும் சேர்த்து விட்டார். அப்படியே படிப்படியா வளர்ந்து இன்னிக்கு ஃபாதர் தெரி ஆயிருக்கேன்...”

ஃபாதர் தன்னைப் பற்றி விவரித்த கையோடு தாடியை நீவி விட்டபடி ஒரு சிரிப்பு சிரித்தார்.

பேராசிரியர் ராஜேந்திரனுக்கு மிடறு கட்டியது.

"ஃபாதர்… இவ்வளவு வருஷமா இருக்கற உங்களுக்கு இந்த கடல் பிராந்தியத்துல பல நூறு வருஷம் முந்தி மூழ்கிப் போன முத்துக்கோட்டை பற்றி எதுவும் தெரியாதா?"

ராஜேந்திரன் முத்துக் கோட்டை பற்றிச் சொன்ன நொடி ஃபாதர் கண்களில் அபரிமிதமான ஆச்சரியம் + அதிர்ச்சி.

சிறிது நேரம் மௌனிக்கவும் செய்தார்.

"என்ன ஃபாதர் மௌனம் ஆகிட்டீங்க. முத்துக் கோட்டையைப் பற்றி ஆராயறதுதான் எங்க டீமோட பணி. அதை அப்படியே வீடியோ கேமரால 'ஷ"ட்' பண்ணி ஒரு 'அட்வென்ச்சர் ப்ரோக்ராமா' வோர்ல்ட் வைட் டெலிகாஸ்ட்டுக்கு அரேஞ்ச் பண்றதும் எங்க நோக்கம்…" '

"அப்படியா… ஆனா அது அவ்வளவு சுலபமான விஷயமா எனக்குத் தெரியல..."

"ஏன் ஃபாதர்…? அந்தப் பகுதியில கடல் ரொம்ப ஆழமா...?"

"அது பத்தி எனக்கு எதுவும் தெரியாது. ஆனா ஒண்ணு. அந்த ஆராய்ச்சிக்காக வந்த ஒருவர்கூட உயிரோட திரும்பிப் போனதில்லை. அது எனக்கு நல்லாத் தெரியும்…"

"என்ன ஃபாதர் சொல்றீங்க...? ஏன் அப்படி?"

"அது எனக்குத் தெரியாது. ஆராய வந்தவங்க ஏதோ ஒரு விதத்துல இறந்துட்டதால இந்த முத்துக்கோட்டை விஷயம் '"ஒரு புதிராவும், வெளிய எதுவும் தெரியாத ஒன்றாவுமே" இருக்குன்னு நினைக்கிறேன்."

"அப்ப நிறைய பேர் ஆராய வந்துருக்காங்களா?"

"ஓ... எனக்குத் தெரிஞ்சே ஒரு ஐம்பது அறுபது பேர் - இருப்பாங்க. இங்க வந்து இறந்தும் போயிட்ட அவங்க சமாதிங்கல்லாம் கூட சர்ச்சுக்குப் பின்பக்கம்தான் இருக்கு... வேணும்னா போய்ப் பாருங்க" – ஃபாதர் பெர்னாண்டோ சொன்னது அவர்கள் வயிற்றைக் கலக்கியது. அப்போது

வெள்ளைப் பன்றி அலறும் சப்தம் - சிலுவை மணி அவர்களின் சாப்பாட்டுக்காக அதன் கழுத்தை அறுத்துக் கொண்டிருந்தான். ஐந்து பேர் முகங்களிலும் மளமளவென்று பீதி தொற்றிக் கொண்டு ஓடியது.

ஃபாதர் பெர்னாண்டோவும் கவனித்தார்.

"உங்களுக்காக மணி வெள்ளைப் பன்றியையே கொன்னுட்டான். அதான் சப்தம் போடுது. நீங்க ஒண்ணும் வித்யாசமா எடுத்துக்காதீங்க...” என்றார்.

"ஃபாதர்… தேவாலயத்துல இப்படி உயிர் வதை செய்யறது?” - அதுவரை அமைதியாக இருந்த நிர்மலா மனம் பொறுக்காமல் கேட்டாள்.

“தப்புதான்… ஆனால் இந்த தீவுல வேற எந்த கறிவகையும் கிடைக்காது. ராத்திரி நிலவற குளிருக்கு இந்த வகை கறிதான் உடம்புக்குத் தோதா இருக்கும்” - என்று ஃபாதர் சமாளிக்கப் பார்த்தார்.

ராஜேஷ் அவர் பேசுவதை அவ்வப்போது கேமராவில் சுருட்டிக் கொண்டே வந்தான். அதையும் அவர் கவனித்தார். நடுநடுவே “என் முகம் டி.வி. -ல வருமா?” என்றும் கேட்டுக் கொண்டார்.

“ஷ்யூர் பாதர்... உலகம் பூரா உங்களைப் பார்க்கப் போறாங்க. எதுக்காக இல்லேன்னாலும் ஐம்பது வருஷமா இந்தத் தீவுல இருக்கேன்னு சொன்னிங்களே... அதுக்காகவே உங்களைப் பாராட்டி அதுக்காகவே உங்களை மட்டும் வெச்சு ஒரு டாக்குமெண்ட்டரி எடுக்கணும்... இதெல்லாம் சும்மா...” என்று ராஜேஷ் சொன்னபோது ஃபாதர் முகத்தில் பெரிய உற்சாகமில்லை. மாறாக அவர் லேசாக குழம்புவது போலவும் பயப்படுவது போலவும்தான் தோன்றியது.

“சரி... சாப்பாட்டுக்கு முந்தி நீங்க கொஞ்சம் இந்த தீவை சுத்தி பாக்கறதுன்னா பார்த்துட்டு வாங்க. சிலுவையே உங்களை வந்து கூப்பிடுவான்...” - என்ற ஃபாதர் தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு காலிங் பெல்லை எடுத்து ஒரு அழுத்து அழுத்தினார். சப்தம் காதைக் கிழித்தது. பதிலுக்குக் கையில் ஒரு கறிவெட்டும் கத்தியோடு ரத்தம் சொட்டச் சொட்ட வந்து நின்றான் சிலுவை மணி.

"என்னை அந்த அறையிலேயே கொண்டு போய் விட்டுட்றியா?" என்று அவனைப் பார்த்துச் சொன்னார். எதுவுமே பேசாமல் அருகில் வந்தவன்

கத்தியை ‘சட்’டென்று வாயில் செருகிக் கொண்டு இரு கைகளால் நாற்காலியோடு அப்படியே அவரைத் தூக்கினான். விறுவிறுவென்று நடந்து அறைக்குள் சென்று அவரை அப்படியே உட்கார வைத்து விட்டு சமையல் கட்டு நோக்கிப் போய்விட்டான்.

ஐந்து பேருமே அவன் செயலை ஒரு தினுசாகப் பார்த்துவிட்டு வின்சென்ட்டை தான் வெறித்தனர்.

“என்ன சார் அப்படி பாக்கறிங்க?"

“போதும் வின்சென்ட்... நாம புறப்படுவோம்.”

“ஏன் சார்? பயமா இருக்குதா?”

“பயம்னும் சொல்லலாம்... ஒரு மாதிரி குழப்பம்னும் சொல்லலாம்...”

“என்வரைல பயம்தான் சார்... எப்ப சிலுவை மணியை பார்த்தேனோ அப்பவே என்னை பயம் பிடிச்சிகிச்சு. அப்புறம் ஃபாதரை சிலுவைல அறைபட்ட கோலத்துல பார்த்தேன். அவர் என்னடான்னா சாதாரணமா உக்காந்துட்டிருக்கார்... எனக்கு ஒண்ணுமே புரியலை.”

“எப்ப இவ்வளவு தூரத்துக்கு நமக்குள்ளே ஒரு குழப்பம் உருவாகிறிச்சோ அதுக்கு மேல நாம இங்க இருக்கறதுல அர்த்தம் இல்லை. இங்க இருந்து கிளம்பறதுதான் சரி...” - மூர்த்திக்கும் கிளம்பும் துடிப்பு...

“புரொபசர் சார்... இன்னிக்கு நீங்க முத்துக் கோட்டை ஏரியாஎதுன்னு கண்டுபிடிக்கப் போறீங்களா...?”

“பின்ன... அதுக்காகத்தானே வந்துருக்கோம்...”

“பரந்த இந்த கடல்ல அது துல்லியமா எந்த இடம்னு எப்படி கண்டுபிடிப்பீங்க...?”

“அங்கங்க இறங்கி முடிஞ்சவரை உள்ள போய் பார்க்க வேண்டியதுதான்... நிச்சயம் நூறு அடி, நூத்தம்பதடி ஆழத்துக்கு மேல போகாது. என்கிட்ட லெவல் இண்டிகேட்டர்ங்கற கருவி இருக்கு. அதை தண்ணிக்கு மேல பிடிச்சுகிட்டு ஆபரேட் பண்ணினா அதுல இருந்து ஒரு கதிர் தண்ணிக்குள்ள போய் பூமிய டச் பண்ணும். எத்தனை அடி தூரத்துல அது நிலப்பரப்பை டச் பண்ணுதோ அதை இண்டிகேட்டர்

ஸ்கிரீன் காட்டும்.”

“அப்ப வாங்க... இந்த பன்றிக்கறியை அந்த சிலுவை மணியும், ஃபாதருமே சாப்பிடட்டும். நாம போவோம்..”' - மூர்த்தி வேகமாக காலெடுத்தான்.

“இருங்க சார்... இப்படி அவசரப்பட்டா எப்படி? போட்ல அஞ்சு லிட்டர் டீசல்தான் இருக்கு. குறைந்தது இருபத்தஞ்சு லிட்டர் டீசல் வேணும் - நாம கரைக்குத் திரும்ப...”

- வின்சென்ட் சடாரென்று ஒரு ஆப்பு வைத்தான்.

“வின்சென்ட்... நிஜமாவா சொல்றே?"

“இதுல நான் எதுக்கு சார் பொய் சொல்றேன். ஃபாதர் தான் நமக்கு டீசல் தந்து உதவி செய்யணும். வேற வழியே இல்லை...”

“சரி அவர்கிட்ட போய்க் கேளு. பணம் கூட கொடுத்துடுவோம்.”

“பாத்தீங்களா... அவருக்கு பயந்துகிட்டே அவர் கிட்டையே உதவி கேக்கறதுல தான் எனக்கு சிக்கலே...”

“இதோ பார் வின்சென்ட்... வளவளன்னு நாம பேசிட்டு நிக்கறதுல பிரயோஜனம் கிடையாது. சட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்து இந்த இடத்தை விட்டுக் கிளம்பப் பாக்கணும்.

“சரி சார்... ஒரு வழிதான் இருக்கு எல்லாரும் ஒண்ணா போய் ஃபாதர்கிட்ட போய் பேசுவோம். அவர் ஒரு போட் வெச்சுகிட்டிருக்கார். அதுலதான் அவர் அடிக்கடி எங்க குப்பத்துக்கு வந்து அப்படியே டவுன் வரை போய்ட்டு வருவார். நிச்சயம் அவர்கிட்ட டீசல் இருக்கும்..."

“சரி வாங்க போய்க் கேப்போம்..." - ராஜேந்திரன் அந்த அறைக்குள் திரும்ப நுழையக் காலெடுத்தார். அவர்களும் பின்தொடர்ந்தனர்.

இந்த முறை பாதிரியார் நாற்காலியின் முதுகுப்புறம் தான் தெரிந்தது. பைபிளை மடிமேல் விரித்துக் கொண்டு ஃபாதர் கண்ணயர்ந்து விட்டது போல் இருந்தது.

“ஃபாதர்...” வின்சென்ட் மெல்லக் குரல் கொடுத்தான்.

“யெஸ்...” - அவரும் பதில் குரல் கொடுத்தார்.

"நான்தான் வின்சென்ட் ஃபாதர்…”

“நீங்க தீவை சுத்திப்பாக்க போகலையா?”

“இல்ல ஃபாதர்… இப்ப எங்க யாருக்குமே எதையும் அனுபவிக்கிற மனநிலை இல்லை…”

“என்ன குழப்பம் உங்களுக்கு… ?”

“என் ஸ்டீமர்ல திடீர்னு டீசல் தீர்ந்து போச்சு ஃபாதர்…”

"ஓ… ஜீசஸ்… அப்புறம்…?”

“நீங்கதான் ஃபாதர் உதவி செய்யணும்…”

“ஓ… மை காட்…” - ஃபாதர் அலுப்போடு பெருமூச்சு விட்டார்.

“என்ன ஃபாதர்…?”

“அதை ஏன்பா கேக்கறே… இங்க என் ஸ்டீமர்லையும் டீசல் இல்லை. நானே உங்களுக் கெல்லாம் சாப்பாடு போட்டுட்டு உங்ககிட்ட கேக்கலாம்னு நினைச்சேன்…”

ஃபாதர்… என்ன ஃபாதர் குண்டைத் தூக்கிட் போடறீங்க… ?”

“என்னப்பா பண்ண… எப்பவும் நூறு லிட்டர் ஸ்டாக் வெச்சிருப்பேன். என் போட்லயும் எப்பவும் ஃபுல்லா இருக்கும். ஒருமுறை இந்த சேவியர் ஆட்கள் இந்தப் பக்கம் வந்தப்ப நூறு லிட்டர் டீசலையும் எடுத்து கிட்டு போய்ட்டாங்க… கேட்டதுக்கு துப்பாக்கியை காட்டினாங்க… நான் என்ன பண்ணட்டும்?" - ஃபாதர் பேச்சு பரிதாபமாக இருந்தது. அதன்பின் ஒருவருக்கும் அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. என்னவோ போல் இருந்தது.

“அப்ப உங்களுக்கு ஏதாவது வேணும்னா என்ன பண்ணுவீங்க ஃபாதர்…”

“இப்போதைக்கு இன்னும் ரெண்டு நாளைக்கு கவலை இல்லை. அரிசி, பருப்பு, எண்ணெய், பிரட், பால் எல்லாமே இருக்கு… நீங்கள்லாம் வந்துட்டதால அதுவும் இன்னிக்கே காலியாகிடும். – நாளைய பொழுதுக்கு அந்த கர்த்தர்தான் வழிகாட்டணும்.”

- ஃபாதர் கைகளை உயர்த்தி ஆகாயத்தைக் காட்டினார். வின்சென்ட் தலையை தொங்கப் போட்டபடி அந்த அறையை விட்டு வெளியே வந்தான்; அவர்களும்.

அப்படியே சர்ச்சை விட்டே வெளியே வந்தனர்.

ஃபாதர் சொன்னது போல சர்ச்சுக்கு வெளியே பின்புறத்தில் பரியல் கிரவுண்ட். ஏராளமான சிலுவை மரங்கள் கொண்ட சமாதிகள். கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் நூற்றுக்கணக்கான சமாதிகள். சில சமாதிகள் மேல் கடல் பறவைகள் அமர்ந்திருந்தன. சமாதிகளின் இடையே ஒரு புல்லும் புதரும் தான். ஒரு சமாதியின் மேல் கறுப்பு நாய் ஒன்று படுத்திருந்தது. முதலில் பார்க்கும் போது ஒரு பொம்மை போலத்தான் அது தெரிந்தது. விசுக்கென்று எழுந்து விடைப்புடன் அது பார்க்க ஆரம்பிக்கவும் தான் அதற்கு உயிர் இருப்பதே தெரிந்தது. வெகு நீளமான அதன் செந்நிற நாக்கும், கூர்மையான பார்வையும் ஒரு தினுசாக மிரட்டியது.

கன்யாவும், நிர்மலாவும் தங்கள் இணையுடன் ஒட்டிக் கொண்டனர். ராஜேஷ் முதலில் பயந்தாலும் அதையும் தன் கேமராவுக்குள் அடைக்கப் பார்த்தான். அவன் கேமராவை உயர்த்தி தோளில் ஏற்றவும் அது அந்த இடத்தை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனை நோக்கி ஓடிவர தொடங்கியது.

அடுத்த நொடியே அவ்வளவு பேரும் சிதறி பிரிய ராஜேஷ் சட்டென்று கேமராவை விலக்கிவிட்டு பாய்ந்து வந்த அதன் முன் ஆவேசமாக கத்திக் கூச்சல் போட்டான்.

“ஏய்... போ... போன்னா...” என்று கத்த அதுவும் புலி போல பாய்ந்திட - அப்படியே குனிந்தவன் நல்ல வேளையாக கீழே கிடந்த ஒரு ரீப்பர் கட்டையை கையில் எடுத்துக் கொண்டுதான் எழுந்தான். அவன் கையில் கட்டையைப் பார்க்கவுமே அந்த நாய் திரும்பவும் பாய முயலவில்லை. அப்படியே நின்று வெறித்து விட்டு திரும்பவும் குறிப்பிட்ட அந்த சமாதி மேல் போய் படுத்துக் கொண்டது.

“அப்பாடா...” என்று எல்லோருக்கும் பெருமூச்சு வெளிப்பட்டது. அப்போது சிலுவை மணியும் கைதட்டி சாப்பிடக் கூப்பிட்டான்.

கடலுக்குள் நிறைய கனிச் செல்வங்கள் இருப்பதை உலகறியும். ஆனால் நூற்றுக்கணக்கான கப்பல்கள் அப்படி அப்படியே மூழ்கி உள்ளே கிடப்பது ரொம்ப பேருக்குத் தெரியாது. சில கப்பல்கள் தங்கள் பயணத்தில் மூழ்கிப் போன தகவல்கள் கூட இந்த உலகுக்கு தெரிவிக்கப்படவில்லை. அதற்குக் கூட நேரம் இல்லாத கால கதியில் பல கப்பல்கள் அப்படி அப்படியே தங்கள் சரக்குகளோடு நடுக்கடலில் மூழ்கியுள்ளன. பரந்த உடல் வெளியில் எங்கே, எந்த கப்பல் மூழ்கியது என்பது எவருக்குமே தெரியாது.

பசிபிக் பெருங்கடலின் மைய பாகம் மிக மிக ஆழமானது. நாற்பது மைல் ஆழத்திற்கெல்லாம் அங்கே இடம் இருக்கிறது. அதனுள் மட்டும் உண்டியலில் விழுந்த காசுகள் போல பல கப்பல்கள் விழுந்து கிடக்கின்றன. இப்படி மூழ்கி விட்ட கப்பல்களில் உள்ளவற்றை கொள்ளையடிக்கவென்றே ஒரு கூட்டமும் இருக்கிறத.

இவர்களுக்குக் கடலில் மூழ்கிய கப்பல்களின் விலை உயர்ந்த பாகங்களை கொள்ளை அடிப்பதுதான் தொழிலே.

ஆபத்தான இந்த தொழிலில் ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்த கொடுமையும் அதிகம். இப்படி இறங்கிய பலரை சுறா மீன்கள் அப்படியே விழுங்கியிருக்கின்றன. ஒரு முறை ஒரு சுறா மீன் ஒன்று வலையில் அகப்பட்டு கரைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அது மாமிசத்துக்காக வெட்டப்பட்டபோது அதன் வயிற்றினுள் ஒரு மனித உடல்!

சில லேசான காயங்களுடன் விழுங்கப்பட்டிருந்த அந்த உடலை புகைப்படம் எடுத்து அறிவிக்கப்பட்ட போதுதான் அவன் ஒரு கடற்கொள்ளையன் என்பது தெரியவந்தது. அவன் உடலில் கப்பலுக்கும் அவனுக்கும் ஆன கயிற்றுத் தொடர்பு இருந்து, சுறாமீன் பற்களால் கத்திரிக்கப்பட்டருப்பதும் தெரிந்தது.

மிகவும் இறுக்கமான ஒரு எந்திரம் போல் டைனிங் டேபிளில் ஆறு பேருக்கும் சோறு போட்டுக் கொண் டிருந்தான் சிலுவை மணி. சுடச்சுட அரிசி சாதம், பன்றிக் குழம்பு, ஒரு கீரை வதக்கல், அவித்த முட்டைகள், கண்ணாடி குவளையில் கொஞ்சம் தண்ணிர்.

பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருந்தது. நாக்கிலும் எச்சில் ஊறியது. காலையில் லாட்ஜில் நளினமாக நாலு ரொட்டித் துண்டு, ஒரு டீ என்று குடித்துவிட்டு கிளம்பிய தன் எதிரொலி...

இதற்கு முன் கடலாடிய அனுபவமும் இல்லாததால் கையில் - சாப்பிட எதை எடுத்து கொள்ள வேண்டும், எதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதெல்லாம் தெரியாமல் போய் விட்டது. பாழாய்ப்போன வின்சென்ட்டாவது சொல்லியிருக்கலாம். இப்போது அவனால் இங்கே இப்படி கண்டதை சாப்பிட வேண்டிய தாகிவிட்டது.

மூர்த்தி சைவப் பழக்கம் உடையவன், பன்றிக் கறி குழம்பை வெறித்தபடியே அமர்ந்திருந்தான். ராஜேந்திரன் அதைப் புரிந்து கொண்டார்.

“மூர்த்தி… நீ கறி சாப்பிடமாட்டேன்னு எனக்குத் தெரியும். அதனால் என்ன? கீரை வதக்கல் இருக்குல்ல... அதைத் தொட்டுச் சாப்பிடு...” என்றார்.

அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை.

கீரை வதக்கலை சோற்றோடு போட்டு பிசைந்து வாயில் வைத்தான். துளிகூட உப்பு இல்லை. அதை சொல்வதற்குக் கூட அவனிடம் தயக்கம். வந்தது வரவு என்பது போல சுடச்சுட பிரட்டிப் போட்டு விழுங்கினான். மற்றவர்களும் அதே போல சாப்பிட்டு முடித்தனர். ஒருவர் முகத்திலும் சுரத்தே இல்லை… அவசர அவசரமாக சாப்பிட்டனர். நடுநடுவே தண்ணீரை சரித்துக் குடித்தனர். ராஜேஷ் பன்றிக்கறியை ஏதோ அல்வா சாப்பிடுவது போல 'வதக் வதக் என்று கடித்து தின்றது வேடிக்கையாக இருந்தது. பின் எல்லோரும் எழுந்து வந்து பின்பக்கமாய் சென்று ஒரு உடைந்த பிளாஸ்டிக் வாளியில் இருந்த தண்ணீரைக் கொண்டு கை கழுவினர். அப்போது சிலுவை மணி தோட்டத்தின் பின்புறத்தில் ஒரு குழியை தோண்டிக் கொண்டிருந்தான். நெற்றி வியர்வையை வழித்து வழித்து போட்டு அவன் குழி தோண்டுவதும், அதுவும் ஒரு சமாதிக்குத் தேவையான நீள அகலத்தில் அவன் தோண்டிக் கொண்டிருப்பதும் அவர்களை லேசாகக் கிலி கொள்ள வைத்தது. வின்சென்ட்டுக்கு அவன் ஏற்கனவே அறிமுக மானவன் என்பதால் புரொபசர் வின்சென்ட்டைத்தான் பார்த்தார். வின்சென்ட் புரிந்து கொண்டான்.

“சிலுவை... ஏ. சிலுவை...” - என்று சிலுவை மணியைக் கூப்பிட்டான். அவனும் திரும்பிப் பார்த்தான்.

“சாப்பாடு போட்டதுக்கு ரொம்ப நன்றிப்பா... ஆமா யாருக்கு இந்த குழி?”

வின்சென்ட்டுக்கு சிலுவை மணி பதில் தரவில்லை. பதிலுக்கு அதே இறுக்கமான மெளனத்தோடு கடப்பாரையையும், மண்வெட்டியையும் தூக்கித் துரப் போட்டு விட்டு சிலுவை சர்ச்சுக்குள் நுழைந்தான்.

“வின்சென்ட்... என்னய்யா இது? இவன் வாயைத் திறந்தும் பேசமாட்டேங்கறான்... செய்யற வேலையும் சாதாரணமா தெரியல... இங்க, என்னய்யா நடக்குது?” மூர்த்தியிடம் ஒரு கொந்தளிப்பான குமுறல் வெளிப் பட்டது.

“மூர்த்தி... எனக்கு ரொம்ப பயமா இருக்கு மூர்த்தி. நாம இங்கிருந்து சீக்கிரமா போயிடணும்... எனக்கு இந்த ஆராய்ச்சியும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம் மூர்த்தி…" என்று கன்யாவும் அவனை நெருங்கி வந்து கட்டிக் கொண்டாள்.

“எனக்கும்தான் ராஜேஷ்... புரொபசர் சார்… இது பேர்ல மட்டும் பேய்த்தீவு இல்ல... நிஜமாலுமே பேய்த் தீவு மாதிரிதான் இருக்கு...” என்று நிர்மலாவும் கன்யாவோடு சேர்ந்து கொண்டாள்.

“ஏன் இப்படி பயப்படறீங்க... நம்மளோட அசைன்மெண்ட் ஒண்ணும் சாதாரணமானதில்ல. அச்சீவ் பண்ணிட்டா உலக அளவுல நமக்கு ஒரு பேர் இருக்கும்... அதுக்கும் முந்தி இந்த மாதிரி நமக்கு ஏற்படற சங்கடங்களை நாம ஒத்துமையா இருந்து தீர்த்துக்கணும். பேய், பிசாசு எல்லாம் ஒரு கற்பனை. படிச்ச நாமளும் அதை நினைச்சு கவலைப்படலாமா?”

புரொபசரின் பதில் அவர்களை பாதிதான் சமாதானம் செய்தது. அப்போது அவர்கள் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் அங்கு நடக்கத் தொடங்கியது. சர்ச்குக்குள் போன சிலுவை மணி பாதிரியார் உடலை ஒரு பிணம் போல தன் தோளில் சுமந்து வந்து கொண்டிருந்தான்.

"புரொபசர்… இது என்ன கொடுமை?”

“ஏய் சிலுவை. இது என்ன பாதிரியாரைப் போய் தூக்கிட்டு வரே?"

“ஐயய்யோ... பாதிரியாரைப் பார்த்தா பிணம் மாதிரி தெரியுதே. அவர் செத்துட்டாரா?”

"கொஞ்சம் முந்தி நல்லா இருந்தாரே... இது எப்படி சாத்யம்?"

அவர்களாக அவர்களுக்குள் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு

பதிலையும் சொல்லிக் கொள்ள சிலுவை மணியோ பாதிரியார் உடம்பை அவர் அணிந்திருந்த வெண்ணிற அங்கியோடு புதை குழியில் கிடத்தினான். பிறகு திரும்பவும் சர்ச்சுக்குள் நுழைந்தான்.

"புரொபசர்... என்ன இதெல்லாம்? எங்களுக்குப் பயமா இருக்கு...!" நிர்மலாவும் கன்யாவும் கிட்டத்தட்ட அலறிவிட்டனர்."

“ராஜேஷ்... இங்க நமக்குப் புரியாத சில சம்பவங்கள் நடந்துகிட்டிருக்கு. அப்செட் ஆகாம இதையும் ஷூட் பண்ணு. பின்னால நமக்கு இது வேறு விதத்துல பயன்படலாம்...” - என்று புரொபசர் அவர் களின் அலறலை அலட்சியப்படுத்தி விட்டு ராஜேஷைத் தான் தூண்டினார். அவனும் கேமராவை தோளுக்குத் தூக்கினான். வியூஃபைண்டர் வழியாகப் பார்க்க ஆரம்பித்தான்.

அப்போது சர்ச்சுக்குள் போன சிலுவை மணியும் திரும்பி வந்தான். அவன் இப்போது பாதிரியார் போல அங்கி அணிந்திருந்தான். கையில் கறுப்பு பைண்ட் செய்யப்பட்ட நிலையில் பைபிள். சாதாரணமாக பைபிள் புத்தகம் வெள்ளை, மற்றும் சிவப்பு நிற அட்டைகளில் தான் இருக்கும். அந்த கறுப்பு பைண்ட் பைபிளை சமாதி குழி அருகே சென்று நின்று கொண்டு படிக்கத் தொடங்கினான்...

உயரிய ஆத்மாக்களை நல்லடக்கம் செய்யும் போது வாசிக்கும் அதிகாரப் பகுதிகளை தேடிப்பிடித்து வாசித்தான். சில அடி இடைவெளியில் அந்த ஆறு பேரும் நின்று நடப்பதை எல்லாம் ஒரு மர்மத் திரைப் படக் காட்சி போல பார்த்துக் கொண்டு நின்றனர்.

கன்யாவும், நிர்மலாவும் பயத்தில் வெளிறிக் கொண்டிருந்தனர். நிர்மலாவுக்கு குங்குமப்பூ போல சிகப்பான தேகம். கன்யாவேறு வெண்ணெய் போல இருப்பாள். இருவர் முகத்திலும் கரும் புகை படிந்தது போல் இருந்தது.

சிலுவை மணி பைபிளைப் படித்து முடித்தான்.

பிறகு குனிந்து கைப்பிடி மண்ணை அள்ளி பாதிரியார் உடல் மேல் போட்டான். அப்படியே திரும்பினான். பயந்தபடி நிற்கும் அந்த ஆறு பேரையும் பார்த்தான். முதல் தடவையாக ஒரு மெல்லிய சிரிப்பு சிரித்தான். அவர்களைப் பார்த்துப் பேசவும் செய்தான்.

“நான்தான் இனி இந்த பேய்த்தீவு சர்ச்சோட பாதிரியார். பாவம் இந்த

பாதிரியார். திடீர்னு செத்துட்டார்… தப்பு தப்பு... ‘நான் இன்னும் இரண்டொரு நாள்ல செத்துடுவேன்’னு என்கிட்ட சொல்லிட்டே இருந்தார். அதே மாதிரி செத்துப் போய்ட்டார். நீங்கள்லாம் வரப்போற விஷயத்தையும் சொல்லியிருந்தார். நம்ம தீவுக்கு ஆறுபேர் வரப்போறாங்க. அவங்களால அப்புறமா இந்தத் தீவை விட்டு வெளியே போக முடியாது... பல காலத்துக்கு அவங்க இந்த தீவுலதான் இருக்கப் போறாங்க"ன்னும் சொன்னார்.

அதனால நீங்கதான் இந்த தீவோட குடிமக்கள். நாம இனிமே தேவன் ஏசுவின் நாமத்தை சொல்லிட்டு சந்தோஷமா வாழ முயற்சிப்போம்...”

அவன் பேச்சு விபரீதமாக இருந்தது. அது அவர்கள் முகத்தில் அப்பட்டமாக எதிரொலித்தது.

"ஏ... சிலுவை... என்ன பேசற நீ! நாங்க ஒண்ணும் இங்க வாழறதுக்கு வரலை. ஆராய்ச்சி செய்ய வந்தவங்க... என்ன புரியாம பேசற...?”

வின்சென்ட் சிலுவை மணியைப் பார்த்து அதட்டலாக கத்தினான். பதிலுக்கு சிலுவை மணி ஒரு சிரிப்புதான் சிரித்தான்.

“இதோ பார்... உன் பேச்சு, செயல் எதுவும் சரியா இல்லை. உண்மையைச் சொல். இங்க என்ன நடக்குது? நாங்க வரப்போறது ஃபாதருக்கு எப்படித் தெரியும்?"

- வின்சென்ட்டின் தொடர்ச்சியான எல்லா கேள்விகளுக்கும் ஒரு சிரிப்புதான் சிரித்தான்.

“ஏய் சிலுவை... என்னடா சிரிக்கறே? பாண்டிக் குப்பத்துல மீன் பொறுக்கி போட்டுகிட்டிருந்த பய நீ... நீ இங்க பாதிரியாரா...? இது எவ்வளவு புனிதமான பதவி தெரியுமா? செத்துட்டியா - இல்லை உயிரோட இருக்கையான்னே தெரியாத நிலைல இருக்கற நீ பாதிரியாரா?”

- வின்சென்ட்டிடம் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடத் தொடங்கியது. அதே சமயம் சிலுவை முகமும் அப்படியே மாறிக் கொண்டே போனது.

ஒரு கழுகு போல விடைத்த மூக்கும், விரிந்த கண்களுமாக வின்சென்ட்டை முறைத்தான்.

“முறைக்காதடா... இங்க நீ ஒருத்தன் தான். ஆனா நாங்க ஆறுபேர். யாருக்கு பலம் அதிகம்னு யோசிச்சுப் பார்.”

“அதனால... ?”

"நாங்க இந்தத் தீவை விட்டு போகணும்... அதுக்கு வழி பண்ணு...”

“முடிஞ்சா போய்க்கோ... நான் அதுக்கு என்ன பண்ண முடியும்?”

"எங்களுக்கு டீசல் வேணும். டீசல் கொடு...”

“நான் என்ன பெட்ரோல் பங்க்கா நடத்தறேன்...?”

“டீசல் இல்லாம நீ எப்படி இங்க இருக்க முடியும்? நாளைக்கு சாப்பாட்டுக்கு என்ன செய்வே?"

“அந்தக் கவலை உனக்கு வேண்டாம். போய் மண்வெட்டி, கடப்பாரை எடுத்துகிட்டு வாங்க... காய்கறிச் செடிகளோட விதைகள் இருக்கு. அதைத் தர்ரேன். குழிதோண்டி அந்த விதைகளைப் போட்டு செடி வளர்க்கப் பாருங்க... அதெல்லாம் வளர்ந்து காய்கறி வளர ஆரம்பிச்சாதான் சாப்பாடு, இல்லாட்டி அதுவரை பட்டினிதான்...”

சிலுவை மணியின் பேச்சு புரொபசரையே போட்டு குடைந்தது.

“டேய் என்னடா இது... நாம என்ன ஆதிவாசிகளா?”

"புரொபசர் சார்... என்ன சார் இங்க பேச்சு வேண்டி கிடக்கு...? எங்க சார் உங்க செல்ஃபோன்? - போன் பண்ணுங்க சார்... யாரையாவது உதவிக்கு வரச் சொல்லுங்க...”

“என்ன மூர்த்தி நீ... இங்க டவர் கிடைக்கலே. இல்லேன்னா இந்த நொடி ஒரு பேரல் டீசல் நம்ப தேவைக்கு வந்து இறங்கியிருக்கும் தெரியுமா?"

“என்ன சார் இது... அட்வென்ச்சர் ட்ரிப்புன்னு எங்கேயோ போக வேண்டிய நாம இங்க இப்படி வந்து மாட்டிக்கிட்டோம். இப்ப என்ன சார் பண்ண?"

“எதுக்கு அநாவசிய கவலை... நம்ம ஸ்டீமர்லேயே நாம கரைக்குத் திரும்ப முயற்சி செய்வோம். இந்த தீவுல தான் இவ்வளவு மரங்கள் இருக்கே... இதுல ஆறு பேருக்கு ஆறு துடுப்பு செய்வோம். துடுப்பு போட்டு கிட்டே போகலாம்... எவ்வளவு நாள் ஆனாலும் சரி... ஒரு

நிமிஷம் கூட இங்க இருக்கக்கூடாது... வாங்க...!"

நிர்மலா தைரியமாக அங்கிருந்து விலகிச் செல்லத் தொடங்கினாள். அவர்களுக்கும் அதுதான் சரியென்று தோன்றியது.

நொடிக்கு நொடி மர்மமாய்க் கழியும் இந்தத் தீவில் இருப்பதற்கு ஸ்டீமரிலேயே முடிந்த தூரம் போய்க் கொண்டே இருப்பது தான் உத்தமமாகத் தோன்றியது.

ஆனால் சிலுவை அதைக் கேட்டு திரும்பவும் ஒரு மாதிரி சிரித்தான். சிரித்துவிட்டு இந்தத் தீவுல கால் வெச்ச யாரும் உயிரோட திரும்பிப் போனதா சரித்திரம் இல்லை. - என்று மட்டும் சொன்னான்.

அது கொஞ்சம் கிலிமூட்டத்தான் செய்தது.

இருந்தாலும் சுதாரித்தனர். ஆறு பேரும் வேக வேகமாக நடந்தனர். வழி முழுக்கபேர் தெரியாத தாவரச் செடிகள். அதிசயமாக அவைகளின் மேல் தும்பிகள். சில இடங்களில் வண்ணத்துப் பூச்சிகள் கூட இருந்தன. அங்கங்கே தென்னை மரங்கள் நிமிர்ந்து நின்றிருந்தன. அதில் குலை குலையாக தேங்காய்கள்.

புரொபசர் வின்சென்ட்டைப் பார்த்து “வின்செட், நிறைய தேங்காயும் இளநியும் இருக்கு. பறிச்சு போட்டுக்குவோம்” என்றார்.

“எனக்கு தென்னை மரம் ஏறிப் பழக்கமில்லை சார். இருந்தாலும் முயற்சி செய்யறேன்...” என்று வின்சென்ட் தென்னை மரம் ஏற முயன்றான்.

“நீ இந்த மரத்துல ஏறு. நான் இந்த மரம், மூர்த்தி நீ அந்த மரத்துல ஏறு... இயற்கை உணவு இது. முடிஞ்ச வரை எடுத்துக்கிட்டு ஸ்டீமலர்ல போட்டுக்குவோம்.” என்ற ராஜேஷை புரொபசரும் ‘புத்திசாலி’ என்கிற மாதிரி பார்த்தார்.

“இருங்க... முதல்ல நான் ஏறி ஒரு குலையை வெட்டிப் போடறேன். முதல்ல எல்லாரும் ஆளுக்கொரு இளநீர் குடிப்போம்... அப்புறம் தெம்பா மரத்தை பூரா மொட்டை அடிப்போம்...” என்ற வின்சென்ட் விறுவிறுவென்று அருகாமையில் உள்ள தென்னை மரத்தின் மீது ஏறத் தொடங்கினான். கொஞ்சம் கொஞ்சமாக உந்தி உந்தி மேலே ஏறியவன் குலைக்கு அருகே போய் அப்படியே கையால் அதைப் பிடித்துத் திருகத் தொடங்கினான். அது அவ்வளவு லேசாக அவன் பிடிக்கு வரத் தயாரில்லை. அவன் பார்வையும் அப்படியே மேலிருந்து மொத்தத்

தீவையும் பார்வையிட்டது.

“ஹோவென்று சூழ்ந்து கிடக்கும் கடலும், அது தீவின் கரைகளில் முட்டி மோதும் அலைகளுமாக அற்புதமாகக் காட்சியளித்தது.

ஆஸ்திரேலிய நாட்டில் இருந்து இனப்பெருக்கம் செய்வதற்காக ராமேஸ்வரம் நோக்கிச் செல்லும் கடல் நாரைக் கூட்டம் ஒன்று - அவன் பார்க்க - அப்படியே அவன் தலைமேல் கடந்து போயிற்று.

அப்போதுதான் அவன் அந்த விபரீதத்தை உணர்ந்தான். தீவின் கரைகளில் எங்கேயும் அவர்கள் வந்த ஸ்டீமர் போட்டைக் காணவில்லை!

ஐயய்யோ!

# 6

கடலுக்குள் புதைந்து கிடக்கும் பொக்கிஷங்களில் செம்பவழமும் ஒன்று... ரோஸ் நிறத்தில் பெரிய பெரிய திமிங்கலங்கள் கடலுக்குள் வாழ்கின்றன. அவைகளில் 'ககாட்லா’ என்கிற வகை திமிலங்கள் விசேஷமானவை.

இவை இயற்கையாகவோ செயற்கையாகவோ மரணமடைந்து விட்டால் அப்படியே மிதந்து மிதந்து கடலுக்கு நடுவில் உள்ள சில சின்னஞ்சிறு தீவுகளில் ஒதுங்கி விடுகின்றன. அப்படியே அங்கேயே அவைகளின் சதை உடம்பு காய்ந்து சிதைந்து போகிறது. ஆனால் எலும்புகள் அவ்வளவு சுலபமாக சிதைந்து போவதில்லை. அவை எல்லாம் தீவுக்கரை வெளியில் உள்ள கடற்பாறை நடுவில் சிக்கி அவைகளோடு பதிந்து வெயில், மன காற்று என்கிற தாக்குதல்களால் வேறு பரிணாமத்துக் மாறுகின்றன. அதுதான் கடல்பவழம் எனப்படுகிறது.

இந்த கடற் வழங்கள் மிக மிக விலை மதிப்பானவை. நீரில் பிறந்து நீரால் வளர்ந்த இதற்கு பஞ்சபூத அம்சங்களில் நீர்க்குணமே மிகுதி. நல்ல உறுதித்தன்மையும் உடைய இவைகளிடம் கல் போன்ற தன்மை இருப்பதால் சிற்பங்கள் செய்ய சில பவழங்கள் இடமளிக்கின்றன.

கடற் செல்வத்தின் பவழம் தனித்தன்மை உடையது. பவழத்தை அடுத்து கடலில் கிடைப்பதில் கடல் தாமரைகளும், பாசிகளும், வேறு

சில கொடி வகைகளும் மருத்துவ குணம் உடையவை.

இவற்றுள் முத்து மட்டும் ஒரு மாதத்தில், காயானது பிஞ்சாகி மெல்ல வளர்ந்து பெரிதாகி பழுப்பது போல சிப்பிக்குள் வளர்கின்றது.

முத்து கிரகங்களில் சந்திரனின் அம்சம்.

காரணம்... சந்திரன் வரும் நாளான பௌர்ணமியிலும் சரி, வராத நாளான அமாவாசையிலும் சரி கடல் நீரில் ஏராளமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. கடலை ஒரு கட்டுக்குள் வைப்பதில் சந்திர கிரணங்களுக்கு ஒரு சக்தி உண்டு. அதனால் கடலில் விளைகின்ற முத்து சந்திர அம்சமாக கருதப்படுகிறது.

வின்சென்ட் மரத்தின் மேல் தேங்காய் பறிப்பதை விட்டு விட்டு "புரொபசர் சார், மோசம் போய்ட்டோம் சார்..." என்றபடியே 'சரசர'வென்று கீழே இறங்கினான்.

எல்லாரும் அப்படியே விக்கித்துப் போய் அவனைப் பார்த்தனர். படு வேகமாய்த் தரையைத் தொட்டவன் "சார்... நாம வந்த ஸ்டீமர் போட்டைக் காணோம் சார்..." என்றான்.

"என்னய்யா சொல்றே...?"

"மேல இருந்து பார்த்தப்போ மொத்தத் தீவும் தெரிஞ்சிச்சு. நானும் சுத்தி ஒரு பார்வை பார்த்தேன். நங்கூரம் போட்டு நிறுத்திட்டு வந்த போட்டைக் காணலை..."

என்னய்யா... தலைல குண்டைத் தூக்கிப் போடறே... அதுல தான் நம்மோட ஸ்விம் சூட்ல இருந்து எல்லாமே இருக்கு."

"புரொபசர்... வாங்க போய் பாத்துடுவோம்..." மூர்த்தி அங்கிருந்து கரை நோக்கி ஓடினான். அவன் ஓடும் போது தீவில் அங்கங்கே முளைத்திருந்த ஒருவித காளான் குடைகள் கால்பட்டு நசுங்கிச் சிதைந்தன. பின்னாலேயே புரொபசரும் மற்றவர்களும் ஓடினர். வின்சென்ட்டுக்கு பிரமை பிடித்த மாதிரி ஆகிவிட்டது.

"போச்சு... எல்லாமே போச்சு... அப்பவே குப்பத்துல ஜோசப் சொன்னான். பேய்த்தீவு பக்கம் மட்டும் போயிடாதேன்னு... நான் கேக்கலை ஆனா இப்படி வந்து மாட்டுவேன்னு நினைக்கலை..." - என்று அங்கேயே தென்னை மரத்தடியில் அமர்ந்து கொண்டு பெனாத்த

ஆரம்பித்தான். வெகு தூரத்தில் சமாதி மேல் படுத்திருந்த அந்த கறுப்பு நாயும் அவனையே தான் பார்த்தபடி இருந்தது!

வாளித் தண்ணிரை ஆவேசமாய் வீசி எறிந்த மாதிரி கரைப்பகுதியில் அலைகளிடம் வேகம். அவைகளுக்கு அப்பால் வெகுதூரம் வரை நீல நீர்த் தாரைகள்தான். அந்த ஸ்டீமர் போட் மட்டும் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை.

“சார்... என்ன சார் இது! இப்படியா வந்து மாட்றது?” ராஜேஷ் காற்றுக் குரலில் மெலிதாக வெடித்தான்.

“எனக்கு மட்டும் என்னப்பா தெரியும்... ஒரு நல்ல விஷயத்துல ஈடுபடறதா நினைச்சுதான் இதுல இறங்கினேன். ஆனா நாம எதுக்காக புறப்பட்டோமோ அதுல இருந்து விலகி திசைமாறி எங்கேயோ போய்க்கிட்டிருக்கோம்...”

சினிமாலதான் சார் இந்த மாதிரி தீவுகளைப் பாத்துருக்கேன். நிஜத்துல பார்க்கும் போது நம்ப முடியலை சார்... நம்ப முடியலை...”

“போனும் ஒர்க் பண்ண மாட்டேங்குது... கண்ணுக்கு எட்டின தூரம் படகுகளும் தெரியலை... என்ன பண்ணப் போறோம்னு தெரியலையே..."

“வாங்க... அந்த சிலுவை மணியையே என்னன்னு கேட்போம். ரெண்டுல ஒண்ணு பாத்துடுவோம். அவன் ஒருத்தன். ஆனா நாம ஆறு பேர். நாம எதுக்கு அவனுக்காகக் கவலைப்படனும்?” - ஆவேசமானான் மூர்த்தி.

“எனக்குக் கடல்ல கண்டம்னு அம்மா புலம்பினது சரியா இருக்கும் போல இருக்கே...?” - கன்யா அவன் தோளைப் பற்றியபடி விசும்பி அழத் தொடங்கி விட்டாள்.

“அழாத... அழுதா அது நமக்கு பலவீனம். எது நடந்தாலும் சரி... நாம தைரியத்தை மட்டும் விட்டுடக் கூடாது... வாங்க போவேம்...” மூர்த்தி ஆவேசமாக முன்னால் நடந்தான். வேறு வழியின்றி எல்லோரும் அவனைத் தொடர்ந்தனர்.

ஆவேசமாக ஒட்டு மொத்தமாக சர்ச் முன் நின்றனர். ஒருவரை ஒருவர் ஆவேசத்தோடு பார்த்துக் கொண்டு விட்டு 'திபுதிபு’வென்று சர்ச்சுக்குள் நுழைந்தனர்.

சிலுவை மணி நிதானமாக சர்ச்சுக்குள் ஒட்டடை அடித்துக் கொண்டிருந்தான்... ரோம் நகரம் பற்றி எரியும் போது நீரோமன்னன் சாவதனமாக பிடில் வாசித்த மாதிரி அவனிடம் ஒரு நிதானம்.

“ஏய்ய்ய்...” - மூர்த்தி நிமிர்ந்து அவனைப் பார்த்து பிடரி சிலிர்த்துக் கத்தினான். ஏதோ சங்கீதம் கேட்பவன் போல நிதானமாகத் திரும்பிப் பார்த்தான் சிலுவை மணி.

“என்னடா... இங்க என்ன நடக்குது? கடற்கரைல நாங்க நங்கூரம் போட்டு நிறுத்திட்டு வந்த ஸ்டீமர் எங்கடா...?”

மூர்த்தியின் அலறலுக்கு ஒரு சாதாரண வெறிப்பு தான் சிலுவை மணியிடம்...

“டேய் கேக்குறேன்ல... சொல்லுடா... இல்லாட்டி உன்னை நாங்க அடிச்சு கொன்னுடுவோம்...”

- மூர்த்தி கத்திய கத்தலில் சர்ச்சுக்குள் தொங்கியபடி இருக்கும் லஸ்தர் விளக்குகள் எல்லாம் ஆடின.

“மூர்த்தி... டோன்ட் பீ டென்ஷன்... நான் கேக்கறேன்... அப்பா சிலுவைமணி... நாங்க தெரியாம இந்தத் தீவுக்கு வந்துட்டோம். எங்கள விட்று. நாங்க போயிடறோம்... எங்க போட்டை யாருப்பா எடுத்துக் கிட்டு போனது...?”

“என்னைக் கேட்டா...?” - சிலுவை மணி கேட்டதில் ஏராளமான அலட்சியம்.

“உன்னைக் கேக்காம...? நீதானே இங்க இருக்கே... ?”

"நானா...? சரிதான்! நான் இங்க ஒரு வேலைக்காரன். உள்ள போய் பாதிரியார்கிட்டே கேளுங்க...”

அவன் பதில் நெஞ்சில் குத்திய மாதிரி இருந்தது.

“ஏய்... என்னடா உளறுற? அவர்தான் செத்து சுண்ணாம்பாயிட்டாரே... எங்க எதுக்க தானே போட்டு புதைச்சே...?” - புரொபசரே பொறுமை இழந்து வெடித்தார்.

“என்ன சப்தம் இங்க... மணி... யார் கூடப் பேசிட்டு இருக்கே?” - என்று

ஒரு குரல் கேட்டது.

திரும்பினால்... பாதிரியார் உயிரோடு!

அவர்கள் ஆறு பேருக்குமே வாய் வழியாக கையை விட்டு 'லப்டப் லப்டப்' என்று துடித்தபடி இருக்கும் இதயத்தை யாரோ ஒரு பிசை பிசைந்தது போலிருந்தது.

“ஃபா... ஃபா... ஃபாதர்...!"

“யெஸ்... நான் ஃபாதர் பெர்னாண்டோ தான். நீங்கதான் பேசிட்டு இருக்கீங்களா? ஆமா... சாப்ட்டு முடிச்சிட்டீங்களா?"

“ஃபாதர்... ஃபாதர் பெர்னாண்டோ... நீங்க உயிரோடயா இருக்கீங்க...?"

“என்ன சன்... உயிரோட இல்லாம எப்படி உங்க கூட பேச முடியும்? ஏன் உங்களுக்கு இந்தக் குழப்பம்?"

“இல்ல... இல்ல... உங்களை தூக்கிட்டு வந்து இதோ இந்த சிலுவை மணி பொதச்சதை நாங்க பார்த்தோம்...”

“ஹோ... அதுவா அது ஒரு விளையாட்டு. நான் செத்துப் போனமாதிரி நடிப்பேன்... இவனும் புதைப்பான். சம் டைம்ஸ் இவன் செத்துப் போவான்... நான் புதைப்பேன். இங்க எங்களுக்குப் பொழுது போக வேண்டாமா?"

“ஃபாதர்...!"

“பயப்படாதீங்க... நீங்கள்லாம் சாப்பிடாச் சில்ல...?”

“அத விடுங்க... எங்க ஸ்டீமர் போட் காணாம போயிடிச்சு ஃபாதர்...”

“என் போட்டும் தான் காணாம போயிடுச்சு. நான் என்ன உங்கள மாதிரி கவலைப்படறேனா... எல்லாம் இந்தத் தீவுல திரியற கோஸ்ட்டுங்களோட கண்ணா மூச்சியா இருக்கும்...”

“வாட்”

“கோஸ்ட்... கோஸ்ட்... நீங்க கேள்விப்பட்ட தில்லையா...? இறந்த பிறகு பாவம் செய்தவங்க கோஸ்ட் ஆவாங்க. புண்ணியம் செய்தவங்க தேவன்கிட்ட போய் சேர்ந்துடுவாங்க...”

“என்ன ஃபாதர்... நாங்க ஒன்னு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்க..."

“நான் உள்ளதை சொல்றேன்... இது கோஸ் ஐலண்ட் நிறைய கோஸ்டுங்க திரியற ஐலண்ட். இங்க மட்டும் எவ்வளவு ஆவிங்க இருக்கு தெரியுமா?"

“ஃபாதர்... ப்ளிஸ்! எங்க படகு எங்களுக்கு வேணும். எங்கள விட்றுங்க... நாங்க போயிடறோம்...”

“அட என்ன நீங்க... நாங்க என்னமோ உங்க படகை ஒளிச்சு வெச்சுக்கிட்டு விளையாட்ற மாதிரி பேசிறீங்களே... மைடியர் சைலட் நான் புதியவங்களோடல்லாம் விளையாடறதில்லை...”

- ஃபாதர் சளைக்காமல் பதில் சொன்னார். அவர் முகத்திலும் ஒரு குறும்பு. ஆனால் கண்களில் ஒரு குரூரம்!

நிர்மலாவும், கன்யாவும் கண்ணிர் விட்டு அழத் தொடங்கி விட்டனர்.

“சார்... என்ன சார் இது?”

“நோ... நாம புலம்பக் கூடாது. இந்த பாதிரியாரும், இதோ இந்த மொட்டை மண்டையனும் நம்மளை கிறுக்கனுங்கன்னு நினைச்சுட்டாங்க. இனி இவங்க கிட்டே வாயாலப் பேசி பிரயோஜனமில்லை...”

- ராஜேஷ் காமிராவை தோளை விட்டு கீழே வைத்துவிட்டு பாதிரியார் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். பாதிரியார் துளிகூட அசரவில்லை. கொஞ்சம் விகாரமாக சிரித்தார். அப்படி சிரித்த போது அவரது மேல் வரிசை பற்களில் இரண்டு பற்கள் நீளமாய் கத்தி போல் கூர்மையாகத் தெரியவும், பயந்துபோய் அவரை விட்டவன் உதறிக் கொண்டு பின்னால் வந்தான்.

பாதிரியார் தொடர்ந்து கூர்மையாக பார்த்தார்.

அங்கே சட்டென்று ஒருவித அமைதி.

படுவேகமாக பாதிரியார் அருகில் வந்து நின்ற சிலுவை மணியும், அவர்களை கர்ண கடூரமாக பார்த்து முறைத்தான். அவனும் உதடுகளை அகட்டி ஒரு மாதிரி பார்த்த போது அவன் பல்வரிசையிலும் ரத்தம் உறிஞ்சும் அந்த கோரைப் பற்கள் தெரிந்தன. கண்களிலும்

விறுவிறுவென்று செவ்வரி ஓடியது. அதை அவர்கள் ஆறு பேருமே பார்த்தார்கள். அப்படியே ஒவ்வொரு அடியாகப் பின் வாங்கத் தொடங்கினார்கள். அதைப் பார்த்து கொடூரமாக ரசித்தவன் “உங்கள்ல யாரும் இந்தத் தீவை விட்டு உயிரோட திரும்பப் போறதில்லை... அது மட்டும் நிச்சயம்” என்றான்.

“நோ... நோ... தா பார் மணி. அவங்க ஏதோ கோபத்துல எகிறிட்டாங்க... நான் உன் இனத்தவன். இவங்களுக்கு கூலிக்கு போட் ஓட்டினவன். எனக்காக மன்னிச்சிடு. அப்படிப் பாக்காதே... அந்த போட்டும் இவங்களது இல்லை... என்னோட போட்! நான் ஏழை மீனவன்... நீயே யோசி... என்னால இப்படி ஒரு இழப்பைத் தாங்க முடியும்னு நீ நம்பறியா?”

- வின்சென்ட் கைகளைக் கூப்பிக் கொண்டு கெஞ்சத் தொடங்கி விட்டான்.

“அப்ப நீ மட்டும் சர்ச்சுக்குள்ள போ... இவங்க அப்படியே இந்த தீவை சுத்தி வரட்டும். முடிஞ்சா கடல்ல இறங்கி நீந்தி தப்பிச்சு போகட்டும். இல்லேன்னா இங்கேயே சாகட்டும்... இன்னிக்கு ஒரு ராத்திரி போதும். பேயுங்களோட அட்டகாசத்தை பார்த்தாலே இவங்களுக்கு உயிர் போயிடும்...”

- சிலுவை மணி பாதிரியார் மேல் பாய்ந்த ராஜேஷைப் பார்த்தபடியே சொன்னான். வின்சென்ட்டும் உயிர் தப்பித்தால் போதும்... என்று விறுவிறுவென்று சர்ச்சுக்குள் நுழைந்தான்.

“ஏய் நில்லு... இது துரோகம்...” மூர்த்தியும் ராஜேஷும் கத்தியது அவன் காதிலேயே விழவில்லை. கன்யாவும், நிர்மலாவும் கேவி அழாத குறை... புரொபசர் ராஜேந்திரன் பெருமூச்சுடன் தன் ஸ்பெக்ஸை கழட்டினார். அதை சட்டை நுனியால் துடைத்தவர் திரும்பவும் ஒரு முடிவுடன் அணிந்து கொண்டார்.

“வாங்க போகலாம்...” - என்று திரும்பி நடந்தார்.

“எங்க சார்... எங்க போக?” - ராஜேஷ் கேள்வி யோடு பின் தொடர்ந்தான்.

“முதல்ல இந்த இடத்தை விட்டு வாங்க - கடற்கரைக்குப் போவோம். இந்தப் பக்கம் ஏதாவது கப்பலாவது, படகாவது வருதான்னு

பார்ப்போம்... அதே சமயம் தென்னை மர மட்டைகளை வெட்டி கட்டு மரம் மாதிரி கட்ட முடியுமான்னு பார்ப்போம்...”

- புரொபசர் புதிய கோணத்தில் யோசிப்பது அவர்களுக்குப் புரிந்தது!

நான்கு பேரும் புரொபசரைத் தொடர்ந்தனர்.

வானிலும் மழை மேகங்கள், கருங்கும்மென்று திரண்டு வந்தபடி இருந்தது. மழை கொட்டினால் நனைவதைத் தவிர வேறு வழியில்லை. அண்ணாந்து பார்த்தபடியே நடந்தார்கள்.

# 7

பரந்த இந்த கடற்பர்பில் முத்து என்னும் அரிய செல்வம் விளைவது பெரும்பாலும் ஆசிய நாட்டு கடல்களில்தான். 'முத்து ஒருவித கடல் தாவரம்’ என்பது சிலர் கருத்து... 'இல்லையில்லை... சிப்பிக்குள் இருக்கும் சோறு தான் முத்தாகிறது. அந்த சோறு மீனைப் போலவே ஒரு உயிர்’ என்கின்றனர் சிலர். இன்று கடற்சிப்பிகளை சேகரித்து அதனுள் சாதுர்யமாக சோற்றை வைத்து செயற்கையாக முத்தை உருவாக்கும் விதங்கள் எவ்வளவோ உருவாகி விட்டன.

சில காவிய கற்பனைகளில் சிப்பிகள் நீர்ப்பரப்பு மேல் மிதந்து வரும். அப்போது பெய்யும் மழை நீர் சொட்டுக்கள் அந்தச் சிப்பிகளில் புகுந்து அதுதான் முத்தாகிறது என்கிற கருத்துக்கள் தென்படுகின்றன.

முத்து குறித்து இப்படிப் பலவித செய்திகள்.

முத்துக்களில் கறுப்பு முத்துக்களும் உண்டு. இவைகளுக்குத்தான் சக்தி அதிகம் என்பதும் நம்பிக்கை. அன்றைய கடல் வாணிபத்தில் முத்துதான் இன்றைய டாலர், யூரோ போல் இடம் பெற்ற ஒரு மதிப்பான பொருளாகும். குறிப்பாக ரோமானியர்கள் முத்துக்களுக்காகவே நாவலந் தீவு எனப்படும் நமது நாட்டுக்கு வந்தனர்.

தமிழகத்தில் தூத்துக்குடியிலும், கொற்கையிலும் இன்றும் முத்துக் குளிக்கப்படுகிறது. மூச்சுப் பயிற்சி உள்ளவர்கள் கடலுக்குள் ஒரு பெரும் சுருக்குப் பையுடன் இறங்கி அடி ஆழப் படுகையில் கிடைக்கும் முத்துச் சிப்பிகளை அள்ளி தங்கள் சுருக்குப் பைகளில் போட்டுக் கொண்டு திரும்ப மேலேறி வருவார்கள். பின் கரைக்குத் திரும்பி

சிப்பிகளை நெட்டிமோதி முந்திரிப் பருப்புக்காக அதன் கொட்டைகளை மோதிப் பிளப்பது போல பிளந்து உள்ளே பட்டாணி அளவில் இருந்து கடுகு சைஸ் வரை பல விதங்களில் - பல ரகங்களில் முத்துக்கள் இருக்க, அவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்வதுதான் முத்துக்குளிப்பவர்களின் செயல்!

எதிரில் சமுத்திரம் - ஒரு பெருமழை கொட்டி முடித்திருந்தது. கரை வெளிமேல் வரிசையாக ஐந்து பேரும் அமர்ந்து கொண்டு அலையடிக்கும் சமுத்திரத்தை வெறித்தபடி இருந்தனர்.

ஐவரிடமும் அசாத்திய மௌனம். என்னப் பேசுவது எதைப் பேசுவது என்பது தெரியாத மௌனம்.

சூரியனும் மேற்கில் இறங்கி நீருக்குள் புதைந்து போகப் போவது போல இருந்தான்.

கடிகாரத்திலும் மணி மாலை ஐந்து!

இன்னும் சிறிது நேரத்தில் இருட்டி விடும். பசியைக் கூட தாங்கி விடலாம்... இரவுப் பொழுதில் இங்கே எப்படி கரையில் கிடப்பது என்பதுதான் கேள்விக் குறியாக இருந்தது.

தென்னை மரங்களில் ஏறி மட்டையைப் பறித்து அதைக் கொண்டு ஒரு குடிசை போல போட முடியுமா என்று பார்த்தபடி இருந்தார் புரொபசர் ராஜேந்திரன். மழை பெய்து ஓய்ந்து அதன் நீர் சொட்டுகள் மட்டையின் பச்சை ஓலைகளில் சொட்டிக் கொண்டிருந்தன.

“என்ன சார்... மட்டையை வெட்டி ஏதாவது பண்ணலாம்னா?”

"ஆமாம் ராஜேஷ்... இப்படி உக்காந்துகிட்டிருந்தா ஆச்சா...?”

“அப்ப நாம இங்க இருந்து தப்பிக்க வழியில் லேன்னு முடிவு பண்ணிட்டீங்களா?"

“எதுக்கு இப்படி ஒரு எண்ணம் உனக்கு...? நாம தப்பிக்கப் போறது நிச்சயம். இது ஒரு தற்காலிக தேக்கம் தான் ராஜேஷ்.”

“எனக்கு நம்பிக்கை போயிடிச்சு சார்... அவன் சிரிச்சப்ப பார்த்தீங்களான?”

“ஓ... நீ அந்த பல்லைப் பார்த்து பயந்துட்டியா?”

“சார்... அது டிராகுலா பல். உங்களுக்குப் பயமா இல்லையா?”

“எனக்கென்னவோ அவங்க ரெண்டு பேரும் நார்மல் ஹ்யூமனாவே தெரியலை...”

“அப்படின்னா...? வாட்டு டு யூ மீன்?”

"ஐ மீன்... அவங்களே கோஸ்ட்டா இருக்கலாம்னு நான் சந்தேகப்படறேன்...”

“வாட் நான்சென்ஸ்... கோஸ்ட் அது இதுன்னு கிட்டு...”

“இதோ பார் ராஜேஷ்... நானும் பேய் பிசாசெல்லாம் மனுஷ மனங்களோட விகாரமான கற்பனைன்னு நினைக்கிற ஒருத்தன்தான். எப்பவும் அனுபவங்கறது வேற மாதிரியால்ல இருக்கு...?”

“இங்க நம்மால புரிஞ்சுக்க முடியாத ஒரு மர்மம் இருக்குன்னு வேணா சொல்லு... சும்மா பேய் பிசாசுன்னு நீயும் எதையாவது சொல்லாதே...”

“அப்ப பேய்த்தீவுன்னு பேர் வரக் காரணம்?”

"பேய்த்தீவுன்னு சும்மா கலாட்டா பண்றதுக்கும், இங்க யாரும் வந்து டேரா போட்றக் கூடாதுங்கறதுக்காகவும் கூட யாராவது வெச்சிருக்கலாம் இல்லையா?”

“அப்ப இங்க எதுக்கு ஒரு சர்ச் இருக்கணும்? அதை பாத்துக்க ஐம்பது வருஷமா ஒரு பாதிரியாரும் இருக்க வேற எது காரணம்?"

“இப்படி நிறைய கேள்விகள் இருக்கு. அதுக்கெல்லாம் சரியான ஒரு விடையும் இருக்கு. ஆனா அது எதுன்னுதான் நமக்குத் தெரியல...”

அப்ப இங்க நாம பயப்படும்படி எதுவும் ஆயிடாதே...”

“டோன்ட் ஒர்ரி நிர்மலா... நாங்க ஒருத்தருக்கு மூணு பேர் ஆம்பளைங்க இருக்கோம்... இப்படி பயந்தா எப்படி?”

“இல்ல மூர்த்தி... அந்த சிலுவை மணி பேசும் போது இது பேய்த்தீவு... ராத்திரி பேயுங்க அட்டகாசம் பண்ணும் போது அதை பார்த்தாலே இவங்க உயிர் போயிடும்னு சொன்னது உங்க ஞாபகத்துல

இல்லையா?”

“அது பேயுங்க தானா... இல்ல அவன் பண்ணப் போற கலாட்டாவான்னு பார்ப்போம்...”

“அது சரி... பாதிரியாரை நம்ம எதுக்கதானே புதைச்சான்; அப்புறம் அவர் எப்படி உயிரோட வந்தாரு?"

“தெரியல... ஒரே குழப்பமா இருக்கு. ஒருவேளை புதைச்ச இடத்துக்கு கீழ அண்டர்கிரவுண்ட் இருக்குமோ...?”

“மண்ணாங்கட்டி... நம்ம எதுக்கதான் குழி தோண்டினான். சவப் பெட்டியையும் அவரை வெச்சு புதைக்கலை. அப்புறம் எப்படி அண்டர்கிரவுண்டுக்கும் அப்பர் கிரவுண்டுக்கும் இடம் இருக்க முடியும்?”

“போதும்... இந்த பேச்சை விடுங்க... எதுக்காக வந்தோமோ அதைப்பத்தி யோசிக்கக் கூட இல்ல நாம…"

“இனி அதுபத்தி யோசிச்சு என்ன பிரயோஜனம்? முத்துக்கோட்டைங்கற ஊரை மட்டும் இந்த கடல் முழுங்கலை... நம்மளையும் சேர்த்து விழுங்கப் போகுது. நாமல்லாம் சேர்ந்து போய்ச் சேரப் போறோம்...”

“ஐயய்யோ... இது என்ன அபசகுணம் பிடிச்ச மாதிரி... நாம ஒண்ணும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் பக்கத்துலே இல்லை. இங்கே இருந்து இருபது, இருபத்தைஞ்சு மைல் தூரத்துல இருக்கு பாண்டிக் குப்பம்ங்கற நம்ம தமிழக கடற்கரை மனோதைரியம் மட்டும் இருந்தா நீச்சலடிச்சே கடந்துடலாம்...”

“கடக்கலாம்... கடக்கலாம்… வழியில சுறாமீன்கள் வந்து நம்மை முழுங்கினா இந்த உலகத்தை விட்டுக் கடக்கலாம்...”

- அவர்கள் ஐந்து பேரும் இப்படி சளைக்காமல் பேசிக் கொண்டே போனார்கள். பேராசிரியர் ராஜேந்திரன் பேச்சை தொடங்கியதோடு சரி... அவர்கள்தான் வரிசையாக தொடர்ந்தனர். அவரோ தீவிரமான யோசனையோடு அப்படியே நடந்து கொண்டேயிருந்தார்.

ராஜேந்திரன் மெல்ல பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை விட்டுக் கொண்டவராக நடந்து போனபடியே இருந்தார். கரையோரமாக போனாலே போதும்... ஒரு வட்டமடித்து ஆரம்பித்த இடத்துக்கே வந்து விடலாம். அங்கங்கே கரை ஓரத்தில் பாறைகள். கரும்பச்சை நிறத்தில்

பாசி பிடித்து அப்படியே கட்டிப் போய் விட்டிருந்தன. அதில் ஒரு பாறை மேல் ஒரு துணி சிக்கிக் கொண்டு அலை வந்து தழுவும் போதெல்லாம் தலையணை போல பொங்கிப் பொங்கி எழுந்து அடங்கியபடி இருந்தது.

ராஜேந்திரன் அதன் அருகே சென்று அந்த துணியை இழுத்து எடுக்கப் பார்த்தார். அதுவும் அவர் கையோடு வந்தது. எண்ணெயில் நனைந்த துணி போல வழவழ வென்று கையைக் கொழகொழக்கச் செய்தது.

அது ஒரு காக்கிச் சட்டை தோள்பட்டையில் லூப்பெல்லாம் இருந்தது. ராஜேந்திரன் அதை புரட்டி புரட்டி முன்னும் பின்னும் பார்த்தபோது அந்த சட்டை யின் முன்புறத்தில் நேம் பேட்ஜ். அதில் ராஜநாயகம் - சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்கிற எழுத்துக்கள்.

ராஜேந்திரனுக்கு லேசாக நெஞ்சடைத்தது.

‘ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் சட்டை இங்கே இப்படி கிடக்கிறது என்றால் அவர் இங்கே எதற்கோ வந்திருக்க வேண்டும்... வந்த இடத்தில் அவருக்கும் ஏதாவது விபரீதம் நேரிட்டிருக்குமோ?’

ராஜேந்திரன் சட்டையை பார்த்தபடியே நின்றபோது “என்ன சார்... என்ன அது கைல...” என்றபடியே ராஜேஷ், நிர்மலா, மூர்த்தி, கன்யா நான்கு பேரும் அவர் அருகே வந்து அவரைச் சூழ்ந்து நின்றனர். காலடியில் புரண்டு புரண்டு வந்து மோதிவிட்டுச் செல்லும் நுரைத் தும்பலான அலைகள்.

“இது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருத்தரோட சட்டை...”

“அது எப்படி இங்க?"

“இது தாறுமாறா கிழிஞ்சிருக்கு... எதுக்கோ அவர் இந்த பேய்த்தீவுக்கு வந்திருக்கணும்...”

"ஒரு போலீஸ்காரர் எதுக்கு வருவார்... ஏதாவது துப்பு துலக்கல் விஷயத்துக்காகத்தான் இருக்கும்...”

“அது சரி... அவர் சட்டை இங்க கிடக்குது... அவர் என்ன ஆனார்?"

“இந்த சட்டை கொழ கொழன்னு இருக்கறதை வெச்சுப் பார்த்தா ஒரு இரண்டு மூணு நாள் தான் ஆகியிருக்கணும்னு தோணுது... ஏன்னா... இந்த அலைக்கு எப்பேர்ப்பட்ட அழுக்கா இருந்தாலும் சரி... கரைஞ்சு

போயிடும். இந்த துணியில கரையலைன்னா இந்த துணி இங்க சில நாளாதான் இருக்கணும்!”

“சட்டைல எப்படி சார் கொழ கொழன்னு எண்ணெய் வந்தது?"

“தெரியலை... சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தன்மேல ஆயில், இல்லேன்னா கிரீசை தடவிகிட்டு கடல்ல நீந்தி தப்பிக்க பார்த்துருக்கலாம்... ஏன்னா அவரைக் கவ்வ மீன்கள் வந்தா இந்த வாடைக்குப் பயந்து போயிடும்னு அவர் நினைச்சிருக்கலாம். இல்லேன்னா கடல் தண்ணி உடம்பை பாதிக்காம இருக்க அவர் இப்படி செய்திருக்கலாம்.

ராஜேந்திரன் தனது யூகத்தை வார்த்தைப் படுத்திய படியே கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஐந்து நாற்பது. இன்னும் சில நிமிடங்களில் சூரியன் அஸ்தமித்து இருட்ட ஆரம்பித்துவிடும்... இரவில் வெளிச்சத்துக்கு என்ன செய்வது?

புரொபசர் ராஜேந்திரன் தீவிரமான சிந்தனையோடு அந்த கொழ கொழப்பான காக்கிச் சட்டையை அப்படியே சிறிது தொலைவுக்கு கொண்டு சென்று மணல்வெளி மேல் காயப் போட்டார். பின் ஒரு வளைந்த தென்னை மேல் ஏறி முடிந்த தூரம் நடந்து அப்படியே நிமிர்ந்து சென்று ஒரு அரை வட்டப் பார்வை பார்த்து முடித்தார்.

“என்ன புரொபசர் பாக்கறீங்க...?”

“எனக்கென்னவோ சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜநாயகம் உயிரோட இருக்க வழி இல்லாத மாதிரிதான் தெரியுது...”

“அப்ப அவர் இறந்து அவர் உடம்பு இங்க எங்கயாவது கிடக்கலாம்ன்னு நினைக்கறிங்களா?”

“நிச்சயமா... எல்லாரும் தேடுவோம்... அவர் உடம்பு நிச்சயம் கிடைக்கும்...”

"புரொபசர் சார்... நமக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை? அந்த உடம்ப வெச்சு நாம என்ன பண்ண?”

“நான் சொல்றதுல காரணம் இருக்கு... அவ்வளவு பெரிய போலீஸ் அதிகாரியாலையே தப்பிக்க முடியலைன்னா நாம எந்த மூலை...”

"சரி. அப்புறம்?”

“புத்திசாலித்தனமா பணிஞ்சு பாதிரியார் கால்ல போய் விழுந்து அப்படியே தப்பிக்கற வழியைப் பாக்க வேண்டியதுதான்...”

“எனக்கென்னவோ கொக்கு தலைல வெண்ணெயை வெச்சு பிடிக்கிற மாதிரிதான் இருக்குது...”

“முதல்ல சர்க்கிள் உடம்பைத் தேடுவோம். எனக்கு வேற சில சந்தேகங்களும் இருக்கு...”

“என்ன புரொபசர்… போலீஸ் மாதிரி சந்தேகம் அதுஇதுன்னுகிட்டு... இருட்டப் போகுது...” பிணத்தை தேட்ற நேரமா இது?"

“இல்லேன்னாலும் நாம இங்க என்ன பண்ண முடியும்? கடற்கரை வெட்ட வெளி மணல் வெளில படுக்கிறது தான் ஒரே வழி. அதிகாலைல இந்த பக்கமா படகுல யாராவது கடலாட போறாங்களான்னு பாத்து அவங்களைக் கூப்பிடணும். இங்க நின்னு எவ்வளவு கத்தினாலும் காதுல விழாது. ஆனா ஒரு பிணம் இருந்து அதை எரிச்சா அது குறைஞ்சது ஒரு ஆறு மணி நேரம் எரியும். அந்த நெருப்பும் புகையும் தூர இருக்கிறவங்க பார்வைல படும் இல்லையா?”

"புரொபசர் அந்த அளவுக்கு உடைத்துப் பேசவும் தான் அவர்களுக்குப் புரிந்தது.”

“ஒ... நீங்க அப்படி வர்றீங்களா?” - என்று கேட்டு கையை சொடக்கினான் ராஜேஷ்.

“ஐயோ... பொணத்தை எரிக்கறதா? நாமளா?”அலறினாள் நிர்மலா.

“இல்லேன்னா நாமளே பொணமாயிடுவோம்... பரவாயில்லையா?” - மூர்த்தி திரும்பிக் கேட்டு அவளை அடக்கினான்.

"லேடீசுங்க இரண்டு பேரும் அமைதியா நடக்கிறத கவனிங்க. நாங்க மூணு பேரும் போய்ப் பாத்துக்கறோம்.”

“சீக்கிரமா போங்க... இந்த வெளிச்சம் போறதுக் குள்ள எவ்வளவு தேட முடியுமோ தேடுவோம். அப்படியே கடைசியா தோண்டின சமாதி ஏதாவது இருக்கான்னு பாக்கலாம்.”

“யூ மீன்...”

அப்படி தோண்டப்பட்ட சமாதில அவர் புதைக்கப்பட்டிருக்கலாம் இல்லையா?”

"புரொபசர். நீங்க பேசாம போலீஸ்ல சேந்துருங்க. எப்படி இவ்வளவு வேகமா - வித்தியாசமால்லாம் யோசிக்க உங்களால முடியுது?”

“இது நாம நம்மை மெச்சிக்கிற நேரமில்லை... மளமளன்னு நடங்க. நிர்மலா, கன்யா - நீங்க இரண்டு பேரும் இங்கேயே இருங்க. நாங்க வந்துடறோம். அந்த சட்டைத் துணி கிட்டேயே நில்லுங்க. அந்த எண்ணெய் சட்டையும் நல்லா தீப்பிடிக்கும். தீப்பந்தமா பயன்படுத்தலாம். அதான் கொஞ்சம் ஈரம் காயட்டுமேன்னு போட்டிருக்கேன்...”

“சரி புரொபசர் சார்... நாங்க இங்கேயே இருக்கோம். நீங்க போய்ட்டு வாங்க...” - அவர்கள் இருவரும் விடை தந்திட மற்ற மூவரும் மூன்று கோணங்களில் பிரிந்து நடக்க ஆரம்பித்தனர்.

கன்யா, நிர்மலாவை ஒட்டிக் கொண்டு நின்றாள்.

காற்று ராட்சஸ மின் விசிறியாட்டம் அடித்துக் கொண்டிருக்க இருவர் கூந்தலும் தலைக்கு மேலே பல கோணங்களில் ஒழுங்கே இல்லாதபடி பறந்து அதுவும் பீதி மூட்டியது.

“எங்கம்மா... போகாதே... போகாதேன்னாங்க... அட்வென்ச்சர் அட்வென்ச்சர்ன்னு ஆசைப்பட்டு வறட்டுத் துணிச்சல்ல வந்தது தப்பா போச்சு...”

“இப்படி ஆப்பிரிக்க காட்டுல மாட்டிக்கிற மாதிரி மாட்டிக்க வேண்டி வரும்னு நான்கூட நினைக்கல. இந்த ரிசர்ச் குளோபலா ஒரு அறிமுகத்தைத் தரும், ஃப்ரான்ஸ் இல்லேன்னா ஆஸ்திரேலியா போய் அங்க செட்டிலாகி விட உதவியா இருக்கும்னு நினைச்சுதான் துணிச்சலா இறங்கினேன். போற போக்கைப் பாத்தா எமலோகத்துல தான் செட்டில் ஆகப்போறோம்னு தோணுது..."

நிர்மலாவும், கன்யாவும் மௌனமாக இருந்தால் அதுவே பயம் என்கிற மாதிரி தங்கள் ஆசைகளை சொல்லிப் பார்த்துக் கொண்டனர்.

அவர்களுக்கு முன்னே தேடிப் போற புரொபசரும், மூர்த்தியும், ராஜேஷும் கண்களை விட்டே மறைந்து விட்டனர்.

கன்யா... ஒரு நிமிஷம்கூட அமைதியா இருக்காதே... ஏதாவது பேசிகிட்டே இருப்போம். அமைதியா இருந்தா இந்த அலையும், இது போன்ற சப்தமும் என் காதுல ஒரு பயங்கர சப்தமாதான் கேக்குது...”

“எனக்கும் தான் நிர்மலா... பேசாம மற்ற பெண்கள் பாதிக் ஒரு அகாடமிக் டிகிரி முடிச்சிட்டு வீட்டோட இருந்திருக்கலாம். கம்ப்யூட்டர் படிப்பு, டைப்ரைட்டிங் அப்படி இப்படின்னு டெவலப் பண்ணிகிட்டது தான் தப்பாபோச்சு...”

"நான் இப்ப படிப்பைப் பத்திக்கூட பெருசா நினைக்கலை... எங்கம்மால்லாம் எட்டாம் கிளாஸ்தான்... அவங்க என்ன கெட்டா போயிட்டாங்க... எல்லாம் பேராசை பட்டதோட வினை. இந்த உலகம் நமக்கு நெறயவே ஆசை காட்டி வைச்சிருக்கு...”

ஒழுங்கா பாவாடை தாவணி கட்டி நெத்தில குங்குமம் வெச்சுகிட்டு டயம் வரும்போது கல்யாணம் பண்ணிகிட்டு போயிட்டிருக்க நமக்கு தெரியாம போயிடிச்சு... அமெரிக்கா ஆஸ்திரேலியான்னு கனவு கண்டதுதான் நான் செஞ்ச தப்பு...”

"புரொபசரை நான் பெரிய ரிசர்ச் ஸ்காலர்னு நினைச்சேன். அவர் என்னடான்னா வேற டைரக்ஷ்ன்ல போக ஆரம்பிச்சுட்டார்."

அவர்கள் பேச்சுதங்களைத் தாங்களே விமர்ச்சித்துக் கொள்கிறாற் போலவும் கூட இருந்தது. அப்போது அங்கே அவர்களுக்கு இடையில் ஒரு அழுகுரல் சப்தம் மெல்ல ஒலிப்பது போல பிரமை. இருவரும் பேசுவதை விட்டுவிட்டு ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டனர்.

“கன்யா... யார் இது? இங்க நம்ம கிட்டே போய் அழுதுகிட்டு...”

“அதானே... நாமளே இங்க அழுதுகிட்டுதான் நிக்கறோம்...”

அந்த சப்தமும் நேரமாக நேரமாக அதிகமாகிக் கொண்டுதான் போனது. இருவருக்கும் திரும்பிப் பார்க்கக் கூட அச்சமாக இருந்தது. அந்த அழுகுரலும் பின்னால் இருந்துதான் கேட்டது. நிர்மலா தைரியத்தை ஒரு தும்பியின் வாலைப் பிடிப்பது போல் பிடித்துக் கொண்டு திரும்பினாள். அவளுக்கு ஒரு வினாடி மூச்சே நின்று விட்டது...

பின்னால் கடற்கரை பாறை ஒன்றின் மேல் கறுப்பாக ஒரு உருவம்!

# 8

சில கடற்பாசிகள் அற்புதமான மருத்துவ குணம் உடையவை. அதே போல் பாறைகளுக்கு நடுவில் பூக்கும் பல வண்ணங்களில் ஆன கடற்தாமரைகளும் அற்புதமான மருத்துவ குணம் உடையவை. அதிலும் வலம்புரி சங்கினால் முழுக்காடிவிட்டு இந்த தாமரைகளை யும், பாசிகளையும் நீரில் ஊறப்போட்டு பல மடங்கு விருத்தி செய்வார்கள்.

அதிலும் கடற்பாசி வாளி நீரில் புசுபுசுவென்று ஊறிப் பெருகும். இதைத் தான் மதுரைப் பகுதிகளில் 'ஜிகர்தண்டா' என்கின்றனர். எப்பேர்ப்பட்ட உடற் சூட்டையும் 'ஜிகர்தண்டா' தணித்துவிடும். சிலர் வரையில் சீதள உடம்பாக அவர்கள் உடம்பை மாற்றி விடும்.

பிறக்கும் போதே கணச்சூட்டு உடம்போடு பிறந்தவர்கள் பலர். அவர்களுக்கு ஜிகர்தண்டா எனப்படும் கடல் பாசி அற்புதமான மருந்து.

கடலின் அடுத்த பெரிய செல்வம் சங்கு!

நன்றாகவே இருட்டி விட்டது! அந்த இருட்டில் தொடர்ந்து தேடுவது சிரமமாக இருந்தது. வெளிச்சமும் தேவைப்பட்டது. நல்லவேளை புரொபசர் ராஜேந்திரனின் சிகரெட் லைட்டர் கை கொடுத்தது.

"விஷ்க்...!"

என்கிற சப்தமுடன் சிகார் லைட்டின் சுடர் சுமாராக வெளிச்சத்தைக் காட்டியது. ஒரு ஐம்பதடி தூரத்தில் இடப்பக்கமாக ராஜேஷும் வலப்பக்கமாக மூர்த்தியும் கைகளால் புதர்களை விலக்கி விலக்கி பார்த்தபடி முன்னேறிக் கொண்டிருந்தனர். ஒரு இருநூறு மீட்டர் நீளம் கூட நடந்திருக்க மாட்டார்கள். அதற்குள் சர்ச்சுக்கு பின்புறமாக உள்ள மயானம் வந்து விட்டது. மயானத்தைச் சுற்றி வெட்டப்பட்ட தென்னை மட்டைகளை வரிசையாக நட்டு வேலிபோல் உருவாக்கப்பட்டிருந்தது. இதில் சில மட்டைகள் காற்று மழையில் விழுந்து கிடந்தன.

ராஜேந்திரன் அந்த மட்டை அருகே சென்று நின்ற படியே உள்ளே மயானத்தைப் பார்த்தார். அடேயப்பா... எவ்வளவு சமாதிகள்...! சில சமாதிகள்தான் சிலுவைக் குறியுடன் இருந்தன. இதில் எந்த சமாதியை சமீபத்தில் தோண்டி மூடியதாக உணர்வது?

சற்று முன் பெய்த மழையால் ஈரச் சொதசொதப்பு வேறு... சிகரெட் லைட்டர் வெளிச்சத்தை வைத்து ராஜேஷும், மூர்த்தியும் அவரை நோக்கி வந்தனர். "புரொபசர் சார்...”

“சொல்லு ராஜேஷ்...”

“இந்த இருட்டுல எதைத் தேட முடியும்...?”

“தீப்பந்தம் கொளுத்தவும் வழியில்லை... மழை பெய்த ஈரம். வாங்க திரும்பி கரைக்குப் போவோம்...”

“அங்க போய் என்ன பண்ணப் போறோம். இந்த ராத்திரியை பயமில்லாம கழிக்கணும்னா நமக்கு விளக்காவது, நெருப்பாவது வேணும்...”

என்னைக் கேட்டா இங்க இப்படி இருட்டுல தடவறதுக்கு பேசாம அந்த சர்ச்சுக்குள்ள போய் ஃபாதர் கால்ல - கைல விழலாம்...”

“அடிக்கடி மனத்தளர்ச்சியடைந்து முயற்சிக்கவே மறுக்கறீங்க... அவங்க இரண்டு பேரும் செயற்கையா நம்மை மிரட்டப் பாக்கறாங்க...”

"புரொபசர் சார்... அந்த டிராகுலா பல்லு… சவக்குழில புதைக்கப்பட்ட நிலைல எழுந்து வந்தது - இதெல்லாம் உங்களுக்கு செயற்கையா சார்...?"

“நிச்சயமா... நானும் கோரைப் பல்லை பொருத்திக்கலாம். சவக்குழில மூச்சு கட்டி படுத்திருந்துட்டு எழுந்தும் வரலாம். மேஜிக் பண்றவங்க கண் இமைக்கிற நேரத்துல சில விஷயங்களை செய்வாங்க... அந்த வேகம் தான் அவங்க பலம்...”

“சரி... இப்ப இந்த இருட்டுல இங்க நின்னு பேசறதுக்கு திரும்பி நடப்போம். அங்க கரைல இரண்டு பெண்களை விட்டுட்டு வந்திருக்கோம்...”

“அதுக்கு முந்தி ஒரு வேலை செய்வோம். இந்த சமாதிகளைத் தோண்டி சவப்பெட்டியை அப்படியே வெளிய எடுப்போம். சவப்பெட்டிக்குள்ள சவத்தோட தீ வைக்கலாம்... அந்தத் தீயும் அணையாம நெடு நேரம் எரியும்...”

“என்ன சார் நீங்க? வெறுங்கையால எப்படி இங்க தோண்ட முடியும்?”

“இந்த தென்னை மட்டையாலேயே குத்திக் குத்தித் தோண்ட முயற்சி செய்வோம்…”

- புரொபசரும் வேலியாகத் தென்பட்ட தென்னை மட்டையை கையால் ஆட்டி அசைத்து எடுத்து ஒரு துடுப்பு போல பிடித்தார்.

“நோ… நாங்க இந்த விளையாட்டுக்கே வரலை. திஸ் ஈஸ் இம்பாசிபிள். இப்படி சவப்பெட்டியை தோண்டி எடுக்கிறதுக்கு ஃபாதர் கால்ல விழுந்து சர்ச்சுல அடைக்கலம் கேக்கறது எவ்வளவோ மேல்…”

“ராஜேஷ்… வாட் யு சே…?”

- மூர்த்தி சற்று ஆவேசமானான்.

“யெஸ். ஐ அக்ரி வித் யூ… புரொபசர் சார் வெரி… சாரி… நாங்க தனியாவும் வரலை… எங்க வாழ்க்கைத் துணையோட வேற வந்துருக்கோம்… வெரி வெரி சாரி… கமான் மூர்த்தி…”

- இருவரும் திரும்பி நடக்கத் தொடங்கினர். புரொபசருக்கும் சலிப்பாக இருந்தது. இனி அவர்கள் தன் பேச்சைக் கேட்கப் போவதில்லை என்பதை உறுதியாக உணர்ந்து கொண்டவர் வேறு வழியில்லாமல் கையில் துடுப்பு போல பிடித்தபடி இருந்த மட்டையை தூக்கிப் போட்டு விட்டு அவர்களைப் பின் தொடர்ந்தார். காலடிபட்டு மண் துகள்கள் பின் பக்கமாக கெல்லி எறியப்பட்டது… சில இடங்களில் பச்சைப் புற்கள் நசுங்கி வதங்கின. பெயர் தெரியாத கொடிகள் முட்டியில் மோதி கையால் ஒதுக்கப்படும்போது ஒடிந்து போயின. முற்றாக இருள் வந்து ஆக்ரமித்துக் கொண்டும் விட்டது. கண்ணுக்கு முன் கறுப்புத் திரை தொங்கி ஆடுவது போல இருந்தது.

எப்படியோ கரையை எட்டிப் பிடித்த போது அங்கே நிர்மலா மற்றும் கன்யாவின் உடலிரண்டும் கரை மணல் வெளிமேல் படுத்திருப்பது போலக் கிடந்தது.

ராஜேஷும், மூர்த்தியும் அவர்கள் படுத்திருப்பதாக நினைத்துத்தான் அருகில் சென்று அவர்கள் அருகே அப்படி மண்டியிட்டனர்.

“ஹாய்… என்ன படுத்திட்டீங்களா?” - என்ற படியே உடம்பைத் தொட்டபோது அவர்கள் வயிறுகளுக்குள் குண்டு வெடித்தது.

தொட்ட இருவர் உடலிலும் உயிரில்லை!

“புரொபசர்... ' என்று உச்சபட்சமாகக் கத்த, ராஜேந்திரனும் அருகில் வந்து சிகரெட் லைட்டரைப் பற்ற வைத்தார். மெல்லிய அதன் ஒளியில் - கன்யா, நிர்மலா இருவர் கழுத்துப் பக்கத்திலும் இரு பல் தடயங்கள். உடம்பு ரத்தம் உறிஞ்சிக் குடிக்கப்பட்டது போல வெளிறிப் போயிருந்தது.

"புரொபசர் சார்... நடக்கக் கூடாதது நடந்துடிச்சி... பாருங்க சார்... பாருங்க...”

மூர்த்தி வார்த்தைகள் தந்தியடிக்க பதறினான். ராஜேஷுக்கு மயக்கமே வந்து விட்டது.

“இது நிச்சயம் அந்த சிலுவைமணியோட வேலையாத்தான் இருக்கணும்...”

“எக்ஸாக்ட்லி... ராஜேஷ்! விட்டா இதே போல ஒரு சாவு நமக்கும் வரலாம்... ஆனா அதுக்கு முந்தி அந்த இரண்டு பேரையும் நாம சும்மா விடக்கூடாது...”

- மூர்த்தி கைகள் முறுக்கேற உணர்ச்சியை அப்படியே ஒன்று கூட்டினான்.

“இல்ல... உணர்ச்சி வசப்படாதீங்க... இந்த மாதிரி நேரத்துலதான் புத்தி வேலை செய்யணும்... எமோஷன் எப்பவுமே நம்மை சுயமாவே சிந்திச்சு செயல்பட விடாது...”

புரொபசர் பேசியது அவர்கள் இருவரையும் எரிச்சலில் போட்டு தாளித்தது. “போதும் புரொபசர் சார்... உங்ககூட ஆராய்ச்சின்னு வந்ததுக்கு நல்லாவே அட்வைஸ் பண்றீங்க. ஒரு உயிருக்கு இரண்டு உயிர் போயாச்சு. நிச்சயம் நாமளும் கொல்லப்படலாம். ஒரு கோழையா செத்துப் போறதுக்கு - அவங்க ரெண்டு பேருக்கும் ஒரு முடிவு கட்டிட்டு போவோமே...”

“ராஜேஷ்… இவர்கிட்ட என்ன பேச்சு... கமான்...”

- மூர்த்தி சர்ச்சை நோக்கி ஒடக் காலெடுத்தான். சிறிது தொலைவுக்கு படு ஆவேசமாக ஓடியவன் அப்படியே திரும்பி வந்தான். கீழே கிடந்த கன்யாவின் உடம்பைக் குனிந்து வாரியவன், அவன் தலையை தன் மடிமேல் போட்டுக் கொண்டவனாய் இருளில் வெறித்தான்.

புரொபசர் ராஜேந்திரன் சிகார் லைட் வெளிச்சத்தை அவள் முகத்தைப் பார்ப்பதற்கு தோதாக நீட்டிப் பிடித்தார்.

கன்யா முகத்தில் அங்கங்கே நகக் கீறல்களும் தெரிந்தன. பாவம் முழுதாக இருபத்தி நான்கு வயதுகூட ஆகவில்லை... அதற்குள் மரணம் அவளை ஆக்ரமித்து விட்டது. பக்கத்திலேயே நிர்மலா.

அதிகம் பேசாத, ஆனால் கல்பனா சாவ்லா போல வானவெளியில் எல்லாம் பறக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட பெண். அதே வானவெளிக்கு உடம்பை இங்கே உதிர்த்து விட்டு புறப்பட்டு விட்டாள்.

ராஜேஷ் வெறித்தபடியே கண்ணிர் விட்டான்.

ராஜேந்திரன் இருவர்தலை மேலும் கையை வைத்து ஆறுதல் தருபவர் போல கோதி விட்டார்.

எல்லாம் சிற்சில நொடிகள்தான். இருவரும் ஆவேசமாக நிமிர்ந்தனர். “நீங்க வந்தா வாங்க... வராட்டி போங்க... ஆனாநாங்க இரண்டு பேரும் அவங்கள சும்மா மட்டும் விடமாட்டோம்...” என்றபடியே அந்தஇரவில் தீவின் மையத்தில் உயர்ந்து நின்றபடி தெரியும் சர்ச்சின் சிலுவைக் குறியைப் பார்த்தபடியே ஒடினர்.

ஓடும்போது இருவரிடமும் “ஏய்ய்...” என்கிற ஒருவித வெறித்தனமாக குரல்.

சர்ச் வாசல் அமைதியாகக் காணப்பட்டது. ஒரு லஸ்தர் விளக்கில் ஒரே ஒரு மெழுகுவர்த்தி மட்டும் எரிந்தபடி இருந்தது. ராஜேஷும், மூர்த்தியும் அதன் முகப்பில் போய் நின்று உள்ளே பார்த்தனர்.

தேவன் ஏசுவின் சிலை இருபுறமும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நன்றாகவே தெரிந்தது. ஆனால் பாதிரி யாரோ, சிலுவை மணியோ, சர்ச்சுக்குள் அடைக்கலமாகிப் போன வின்சென்ட்டோ ஒருவரையும் காணவில்லை.

“டேய்... கொலைகார நாயுங்களா... எங்கடா போய் ஒளிஞ்சுகிட்டீங்க... வாங்கடா...” - இருவரும் ஆவேசக் குரல் கொடுத்தபடி பிரேயர் ஹாலுக்குள் கால்வைத்து நேரே ஓடினர்.

அவர்கள் குரல்தான் எக்கோ போல எதிரொலித்தது. பாதிரியார் அறைக்கதவு திறந்துதான் இருந்தது.

“ராஜேஷ்... அந்த நாயுங்க அந்த ரூம்லதான் இருக்கணும்... விடக்கூடாது வா...” - என்ற மூர்த்தி அறை வாசலில் போய் நின்றான்.

உள்ளே பார்வையை விட்டவன் அடுத்த நொடி வெலவெலத்துப் போனான். உள்ளே வரிசையாக தூக்கில் மூன்று தூக்குக் கயிறு. முதல் கயிறு காலியாக அடுத்ததும் காலியாக - மூன்றாவதாக வின்சென்ட்.

அது நிஜமா இல்லை ஏதாவது கண்கட்டா? என்று யோசிப்பதற்குள் ‘ஹக் ஹக் ஹக்...' என்று இறைப் பெடுத்த வாயோடு - சமாதிகளின் மேல் அமர்ந்திருந்த கறுப்பு நாய் சர்ச் வாசல் வழியாக உள் நுழைந்தபடி இருந்தது.

முதலில் ஒரு நாய்...

அடுத்தது இன்னொன்று...

அதற்கும் அடுத்தது மூன்றாவது...

இருவரும் திரும்பிப் பார்த்தபோது கறுப்பு நாய்களாக உள்நுழைந்தபடி இருந்தது.

“ராஜேஷ்... என்ன இது? இவ்வளவு நாயுங்க இந்தத் தீவுல எங்க இருந்துச்சு...?”

“யாருக்குத் தெரியும்... இதுங்கல்லாம் நாயுங்க தானா? இல்லை இதெல்லாமே கோஸ்டுங்களா?”

- இருவரும் நெருங்கி நின்று கொண்டு உலர்ந்து விட்ட நாவோடு கேட்டுக் கொண்டனர்.

“ரா... ரா… ராஜேஷ்... இப்ப என்ன பண்ண?”

“தெ... தெ... தெரியலயே...”

- உயிர் மூச்சை இழுத்துப் பிடித்தபடி இருவரும் அசையாமல் நின்றனர். ஆனால் நாய்கள் அவர்களை விடுவதாக இல்லை...

ஒரு நாய் முதலாக பாய்ந்தது...

அடுத்த நாய் அடுத்துப் பாய்ந்தது...

அதன் பின் அடுத்தடுத்துப் பாய்ச்சல்கள்...

ராஜேஷும், மூர்த்தியும் கொடுத்த மரணக் குரல் அந்த சர்ச்சையே இரவு வேளையில் உலுக்கி எடுத்தது!

# 9

கடலில் கிடக்கின்ற செல்வங்களில் சங்கு தனித் தன்மை உடையது. அடுத்தது கிளிஞ்சல்கள்! இன்று சுண்ணாம்பு என்ற ஒரு தேவைக்கு எவ்வளவோ மாற்று வழிகளைக் கண்டு விட்டோம். அந்த நாளில் கடலில் கிடைக்கும் கிளிஞ்சல்கள் தான் பெரும்பாலும் சுண்ணாம்பாகப் பயன்பட்டன.

பல அரண்மனைகள் - அவைகளில் மாடங்கள் கிளிஞ்சல்களை இடித்துத் தூளாக்கி அவைகளால் தான் பூசி மெழுகப்பட்டன. அடுத்தது சங்கு...

கடல் சங்கு மனித வாழ்வோடும் அவர்களது ஆன்மீகத்தோடும் கலந்த ஒன்று. சங்கு என்பது சப்த மெழுப்புவது; விஷ்ணுவின் இடக்கரத்தில் இருப்பது. சங்குக்கு இன்னொரு பெயர் பாஞ்ச சன்யம் என்பதாகும்.

'ஓம்' என்கிற பிரணவத்தில் இருந்தே சப்தமாகிய எழுத்துக்கள் தோன்றியதாக கூறுவர். அந்த சப்தம் சங்கிலிருந்து வந்ததாகவும் கூறுவர். சங்கின் முழக்கம் பல வெற்றிகள் மற்றும் தொடக்கத்திற்குக் காரணமாக இருப்பதாகும்.

சங்குகுளில் நீரை மொண்டு செய்யப்படும் அபிஷேகம் சங்காபிஷேகம் எனப்படும். இந்த சங்காபிஷேகம் தனிச் சிறப்பினை உடையது. இப்படி கிடைக்கும் சங்குகளில் வலம்புரி சங்குமிக விசேஷமானதாகும். சாதாரணமாக சங்குகள் இடம்புரியாகத் தான் கிடைக்கும். வலம்புரி அபூர்வமானது. மிக அதிர்ஷ்டத்தை இது தரும் என்பார்கள்.

விடிந்து விட்டது! பேய்த்தீவின் மேல் சூரிய கிரணங்கள் பட்டு தீவு முழுக்க மண்டிக் கிடந்த பனிப் பொழிவை அவை விரட்டியடிக்கப் பார்த்தன.

தீவு மரங்களில் அங்கங்கே சில பறவைகள்!

தீவோ மிக அமைதியாக ‘ஹோ’வென்று கிடந்தது. வழக்கம் போல தீவின் கரைப் பகுதியில் மட்டும் அலைகளிடம் ஒய்வேயில்லை. வற்றாத சக்தியை உடையவர்கள் நாங்கள் என்கிற மாதிரி அலைகள் ஓடி வந்து ஓடிவந்து உள்வாங்கிக் கொண்டிருந்தன.

தீவுக்குள் சர்ச் சதவைத் திறந்து கொண்டு முதலாக வெளியே வந்தது ஒரு உருவம். கண்களை கசக்கிக் கொண்டு வெளியே தீவைப் பார்த்த அந்த உருவம் வேறுயாருமல்ல. சிலுவை மணிதான்!

பின்னாலேயே தலையிலும், தாடையிலும் ஒட்டி யிருந்த விக்குகளைக் கழட்டி கையில் பிடித்தபடியே வந்தான் வெள்ளை அங்கி அணிந்த பாதிரியார். உருவத்திலும் பெரிய அளவில் மாற்றம்.

அப்படியே இருவரும் திரும்பிப் பார்த்தனர். ராஜேஷும், மூர்த்தியும் கறுப்பு நாய்களால் பிய்த்துக் குதறப்பட்டு பிணங்களாகக் கிடந்தனர். தனி அறைக்குள் அவர்கள் இருவராலும் எப்படியோ தூக்கில் போடப்பட்ட வின்செண்ட் தூக்கில் தொங்கியபடி இருந்தான்.

கறுப்பு நாய்கள் அடக்க ஒடுக்கமாக ஒரு ஒரமாக பள்ளிப் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருப்பது போல அமர்ந்து நாக்கை தொங்கப் போட்டிருந்தன.

அவைகளிடம் ஒரு அசாத்திய கட்டுப்பாடு!

பாதிரியார் உருவில் இருந்தவன் சிலுவை மணியிடம் பேச்சு கொடுத்தான்.

“சிலுவை... வா ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வருவோம்... ஆறுபேர்ல ஐந்து பேர் கதையை எப்படியோ முடிச்சிட்டோம். ஆனா, அந்த இன்ஸ்பெக்டர் ருத்ரா மட்டும் எப்படியோ தப்பிச்சுட்டான் பார்த்தியா?” - நடந்தபடி பேசினான்.

“என்ன இருந்தாலும் போலீஸ்காரன் இல்லையா... அதுலையும் துப்புதுலக்கறதுல பயங்கரக் கில்லாடி வேற! ராஜேந்திரன் போல வந்தா நமக்குத் தெரியாம போய்டும்னு நினைச்சுட்டான். ஆனா நாமெல்லாம் இண்ட்டர்நேஷனல் லெவல்ல கிரிமினல்களை பாத்தவங்கங்கறத மறந்துட்டான் அவன்...”

“அவன் நிச்சயம் தப்பியிருக்க முடியாது. தீவுக்குள்தான் எங்கையாவது விழுந்து கிடப்பான். உன்கிட்ட துப்பாக்கி இருக்குல்ல...?”

“அது இல்லாமலா... எனக்கென்னவோ ராத்திரியே அவன் கடல்ல இறங்கி நீந்த ஆரம்பிச்சிருப்பான்னு தான் தோணுது. இங்க தீவுல நாய்கள் கிட்ட சிக்கி ஒரு கோழையா பலியாகறதுக்கு கடல்ல மீன்களுக்கு பலியாகறத உத்தமமா நினைச்சிருப்பான்...”

- பேசிக் கொண்டே தீவைச் சுற்றி வந்தனர். எங்கேயும் அவர்கள் தேடிய ருத்ரா என்ற ராஜேந்திரன் கண்களில் படவில்லை. கடற்கரை மணல் வெளியில் ஒரு இடத்தில் கிடந்த கன்யாவையும், நிர்மலாவையும் இழுத்துச் சென்று கல்லறைத் தோட்டத்தில் குழியைத் தோண்டிப் போட்டு மூடினர். அப்படியே ராஜேஷ், மூர்த்தி, வின்சென்ட் உடல்களையும் இழுத்து வந்து ஒரே குழியில் போட்டு மூடினர்.

சிலுவை மணி மட்டும் பெருமூச்சுடன் செல்போன் ஒன்றை எடுத்து வந்தான். பின் சர்ச்சின் மேல் கூரைக்குச் சென்றவன் அங்கே உயரமான கிண்டாமணிக்கு மேல் உயரமான டவர் கோபுரம் ஒன்றை சர்ச் கரைமேல் இருந்து எடுத்து நிமிர்த்தி வைக்க ஆரம்பித்தான். மடக்கி மடக்கி வைக்கப்பட்ட ஏணிகளைப் போல இருந்த அந்த டவரில் ஒரு பக்கமாக மேலே ஏறிச் செல்ல சிறிய ஏணியும் அமைக்கப்பட்டிருந்தது. கூரை மேலேயே வடைசட்டி போல ஆன்ட்டனா ரிசீவரும் இருந்தது. அதை தூக்கிக் கொண்டு ஏணி மேல் ஏறியவன் அந்த ஆன்ட்டனா ரிசீவரை டவர் உச்சியில் மாட்டினான். பின் அதைக் குறிப்பிட்ட ஒரு திசையைப் பார்த்து திருப்பி வைத்தவன் கீழே வந்து செல்போனை எடுத்து ஆன் செய்தான்.

“என்ன... டவர் கிடைக்குதா?”

“கிடைக்காம எங்க போகும்? கிடைச்சிடிச்சி...”

"அப்ப முதல்ல தகவல் கொடு. இன்னிக்கு சாப்பிட நமக்கு எதுவும் கிடையாது. கடத்திட்டுப் போன அந்த வின்சென்ட்டோட ஸ்டீமரையும் எடுத்துகிட்டு வரச்சொல்...”

- பாதிரியார் உருவில் இருந்தவன் சொல்லச் சொல்ல சிலுவைமணி செல்லில் யாருடனோ பேச ஆரம்பித்தான்.

“பாஸ். ஆப்ரேஷன் சக்ஸஸ். முத்துக் கோட்டையை ஆராயறதா சொல்லிட்டு வந்த இன்ஸ்பெக்டர் ருத்ராவும் அவனோட குரூப்பும் இப்ப சமாதிக்குள்ள...”

“டேய்... ருத்ரா நம்மகிட்ட சிக்கல... கடல்ல நீந்திகிட்டு இருக்கலாம். நம்ம ரோந்துப் படையை விட்டு பாக்க சொல்...”

“சும்மா இருடா நீ ஒருத்தன்...” - என்று செல்போனை மூடிக்கொண்டு கத்தியவன் “அவனும் அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதிரி மீன்களுக்குத்தான் இரையாகியிருப்பான்... அவன் மட்டும் தப்பிட்டான்னு பாசுக்குத் தெரிஞ்சா ‘ஒரு விஷயத்தை உங்களால முழுசா முடிக்கத் தெரியாதே'ன்னு கத்துவார். பேசாம இரு” என்று வேகவேகமாக பாதிரியார் உருவில் இருந்தவனிடம் பேசியவன் திரும்பவும் செல்போனில் பேசத் தொடங்கினான்.

“பாஸ்... இந்த தடவை ஒருத்தர்க்கு ஆறு பேர். அவங்களை பயமுறுத்தி குழப்பறது. பெரும்பாடா போச்சு. கடைசிவரை அந்த ருத்ரா மட்டும் அசரலை. ஆனா ஒருத்தருக்கு ஐந்து பேர் அவன் கண் எதிர்க்க உயிர் விடவும் அவனும் நொறுங்கிட்டான்... அவன் ஒரு போலீஸ்காரன்கறதும் துப்பு துலக்கத்தான் இந்த தீவுக்கு வந்தான்கறதும் அவன் கூட வந்தவங்களுக்கு கூடத் தெரியாது...”

- என்றெல்லாம் பேசியவன் பலமாக மறுமுனை கூறிய பல விஷயங்களுக்கு யெஸ் பாஸ்... யெஸ் பாஸ்" என்று தலையை அசைத்தவன் இறுதியாக செல்போனை அணைத்தான். பிறகு சிறிது தூரம் சென்று ஒரு மரத்தடியில் தோண்டியவன் ஒரு சற்சதுரமான மரப் பெட்டியை வெளியே எடுத்தான். அதனுள் எல்லாவிதமான மது வகைகளும் இருந்தன. ஏராளமான பிரவுன் சுகர் பாக்கெட்டுகளும் இருந்தன.

“டேய் ராஜசேகரா...” - என்று அந்த பாதிரியார் வேடத்தில் இருந்தவனை அழைத்தவன் “அந்த டிரஸ்ஸை அவுத்துப் போட்டுட்டுவா... கொஞ்சம் தண்ணி சாப்பிடுவோம். இன்னும் ஒரு மணி நேரத்துல நம்ம ஆட்கள் வந்துடுவாங்க... அம்பதா நம்பர் தென்னமரத்துக்கு கீழே புதைச்சு வெச்சிருக்கற கோல்ட் பிஸ்கட் பாக்ஸை எடுத்துக் கொடுத்து விடச் சொல்லியிருக்கார் பாஸ்...

கொஞ்ச நாளைக்கு இனி எவனும் ஆராய்ச்சி அது இதுன்னுட்டு வரமாட்டானுங்க. ஆனா போலீஸ்ல ருத்ராவும் திரும்பலைன்னா ஏதாவது ஸ்டெப் எடுக்கலாமாம். இந்த தடவை ஆறு பேர் வந்தாங்க. அனேகமா அடுத்த தடவை இருபது பேர் வரை வரலாம். நம்ம கோஸ்ட் டைப் மிரட்டலை நல்லாவே டெவலப் பண்ணிக்க சொன்னார் பாஸ்...”

- என்று சொல்லிக் கொண்டே விஸ்கி பாட்டில் மூடியைத் திறந்து அப்படியே வாயில் கொட்டிக் கொண்டான். அவனால் அழைக்கப்பட்ட இந்த ராஜசேகரன் என்பவனும் அந்த மது வகைகளில் மூழ்க ஆரம்பித்தான்.

தண்ணி அடித்தபடியே “இன்னிக்கு நைட்டுக்கு ஃப்ளோராவை அனுப்பச் சொல்லணும். அவதான் எனக்கு சரியான ஆள்...” - என்று கொஞ்சம் காமமாகவும் பேசினான்.

“ஒருத்தருக்கு ஆறு பேரைக் காலி பண்ணியிருக்கோம். பேய்த்தீவோட பயத்தை நிலை நிறுத்தியிருக்கோம். நம்ம கள்ளக்கடத்தல் சரக்கோட இந்த குடோனுக்குள்ள யார் வந்தாலும் சரி... சமாதிதான்!

இந்தத் தீவோட இப்போதைய மதிப்பு மட்டுமே பல ஆயிரம் கோடி ரூபாய். அதுக்கு நாம இரண்டு பேர்தான் காவல்.

நாம கேட்டா ஃப்ளோரா இல்லை... தேவ லோகத்துக்குப் போன் போட்டு ரம்பா, ஊர்வசியைக் கூட நம்ம பாஸ் அனுப்பித் தருவாரு...”

என்று போதையோடு பொங்கினான் சிலுவை மணி.

அடுக்கடுக்காக பாட்டில்கள் காலியாகத் தொடங்கின. அப்படியே ஒருவர் மேல் ஒருவர் போதையோடு விழுந்த போது அந்தத் தீவின் கரையில் ஒன்றுக்கு இரண்டு ஸ்டீமர் போட்டுகள் வந்து தேங்கி நின்றன. உள்ளிருந்து பாண்டிக்குப்பத்துக்கு பக்கத்துக் குப்பமான சேவியர் குப்பத்து ஆட்கள்தான் இறங்கி வந்தனர். அவர்களோடு பல பெட்டிகள், மூட்டைகளும் இறங்கின.

அவர்கள் அந்த சரக்குகளோடு தீவுக்குள் நடந்து சர்ச் முன் போய் நின்றனர். வெளியே சிலுவை மணி என்பவனும் ராஜசேகரன் என்கிற பாதிரி உடுப்புக்காரனும் மயங்கிக் கிடப்பதைப் பார்த்த ஒருவன் “காலைலயே ஆரம்பிச்சுட்டாங்களாட்டம் இருக்கு...” என்று சரக்குகளோடு சர்ச்சுக்குள் நுழைந்தனர். அப்போது தலைக்கு மேல் ஹெலிகாப்டர் ஒன்று பறக்கும் சப்தம் கேட்க ஆரம்பித்தது.

சர்ச்சுக்குள் நுழைந்த அவர்கள் படுவேகமாகத் திரும்பி வந்து வானத்தைப் பார்த்தனர். ஹெலிகாப்டர் தான்! அதுவும் ஒரு தென்னை மரத்துக்கு மேல் சில அடிகள் உயரத்தில் நின்றபடியே தன்னிடம் இருந்த நூல் ஏணியை விட்டது.

நூல் ஏணியைப் பிடித்தபடியே ஒரு உருவம் மேலே ஏறும்போது தான் அது பேராசிரியர் ராஜேந்திரன் என்கிற பெயரில் வந்த இன்ஸ்பெக்டர் ருத்ரா என்பது தெரிந்தது!

“அடப்பாவி... ருத்ரா தப்பிச்சுட்டாண்டா... இந்த தடிப்பசங்க கோட்டை விட்டுட்டாங்க... நமக்கு போன் பண்ண டவரை ஆப்ரேட் பண்ணியிருக்காங்க. அதையே ருத்ராவும் பயன்படுத்தி போலீசுக்குத் தகவல் கொடுத்துட்டான். நல்லா வசமா மாட்டிகிட்டோம்னு நினைக்கறேன்...”

- என்கிற ஒருவனின் புலம்பல் சரி என்பதுபோல் அந்தத் தீவை வட்டம் கட்டி சுற்றி வளைக்க ஆரம்பித் திருந்தது ஒரு ஐம்பது அறுபது ஸ்டீமர் போட்டுகள்.

அவைகளில் மெஷின் கன், ஏர் கன் போன்ற நவீன ஆயுதங்களுடன் போலீஸ்!

விறைப்பான போலீஸ் உடையில் ஒரு மலர் வளையத்துடன் - சில போலீஸ் அதிகாரிகளுடன் இறங்கியிருந்தார் இன்ஸ்பெக்டர் என்கிற அந்தஸ்தில் இருந்து ஸ்பெஷல் ஆபீசர் என்கிற பதவி உயர்வுக்கு சென்று விட்ட ருத்ரா.

- நேராக ராஜேஷ், மூர்த்தி, வின்சென்ட், நிர்மலா, கன்யா என்று ஐந்து பேர்கள் புதைக்கப்பட்ட சமாதிகளுக்குச் சென்றவர் மலர் வளையத்தை வைத்து விட்டு சில விநாடிகள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

பிறகு கலைந்தவர் அந்த சமாதிகளையே வெறித்தார்.

அந்த வெறிப்பு “உங்களைக் காப்பாற்றி இந்த திருட்டுக் கூட்டத்தை என்னால் பிடிக்க முடியாமல் போய் விட்டதே!” என்பது போல இருந்தது.

“சாரி ஃப்ரெண்ட்ஸ்! உங்களைக் காப்பாற்ற என்னால் முடியல. ஆனா திருட்டுக் கூட்டத்தை மடக்கிட்டேன்... அதுக்கு ஒருவிதத்துல நீங்களும் காரணம்...” என்பது போலவும் இருந்தது.

அப்படியே நடந்து சர்ச்சுக்கு வந்தவர் உள்ளே நுழைந்து இயேசுநாதர் முன் மண்டியிட்டார். மனமுருக பிரார்த்தித்தார்.

“பரமபிதாவே... இனி இந்த தேவாலயம் உண்மையான ஒரு

தேவாலயமா மாறும். இந்தப் பகுதியும் ஒரு நல்ல பிக்னிக் ஸ்பாட்டா திகழும். அதற்கு உங்க ஆசி வேணும்...” என்றும் வேண்டிக் கொண்டார்.

முற்றும்